விலை ரூபா: 7.00

*Registered as a News paper in Sri Lanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பத்து

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஆவணி 26 | சனிக்கிழமை | (11.09.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 267

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் சிமெந்து
முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## சமாதானப் பாதையில் இருந்து திசை திருப்பி

# விடுதலைப் புலிகளை சீண்டிவிடும் செயலே

# புல்லுமலைக் காவலரண் தாக்குதலாகும்

## யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவருக்கு தமிழ்ச்செல்வன் காட்டமான கடிதம்

(கிளிநொச்சி)


**தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆத்திரமூட்டி அவர்களை சமாதான முயற்சிகளில் இருந்து விலக வைக்கும் நோக்கிலேயே இலங்கை இராணுவம் நன்கு திட்டமிட்டு விடுதலைப் புலிகளின் புல்லுமலை முன்னரங்கப் பாதுகாப்பு நிலைகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் காட்டமாக தெரிவித்துள்ளார்.**

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் எல்லைப் புறத்தில் உள்ள புல்லுமலைக் கிராமத்திலுள்ள விடுதலைப் புலிகளின் காவலரண் ஒன்றைக் கடந்த செவ்வாய் இரவு இராணுவம் சுற்றிவளைத்து தாக்கிய சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் காட்டமான கண்டனக் கடிதத்திலேயே சு.ப. தமிழ்ச்செல்வன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் றொன் பியூறு ஹெவ்டேக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இம் மாதம் 7 ஆம் திகதி 10 மணியளவில் விடுதலைப் புலிகளின் புல்லுமலை முன்னரங்க காவலரணை இராணுவமும் மற்றும் தமிழர்களை உள்ளடங்கிய 30 பேர் கொண்ட குழுவினர் சுற்றி

(10 ஆம் பக்கம் பார்க்க)



நல்லைக் கந்தன் அலங்கரிக்கப்பட்ட தங்க ரதத்தில் நேற்றிரவு வீதிவலம் வந்தபோது...

## நாட்டில் சமாதானம் மலரவே நாம் அரசுடன் இணைந்தோம்

### தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறு. தொண்டமான்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளினால் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகார வரையின் அடிப்படையில் வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவேண்டும் என்பதற்காகவேதான் அரசிடம் இணைந்ததாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினரில் இருவர் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றதன் பின்னர் செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

பெரும்பான்மைப் பலம் இல்லாத அரசாங்கம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கச்சதீவில் கைவிடப்பட்ட அகதிகள் நேற்று நெடுந்தீவை வந்தடைந்தனர்

(நெடுந்தீவு)

இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பிய போது கச்சதீவில் அநாதரவாக விடப்பட்டிருந்த 28 ஈழ அகதிகள் நேற்று நெடுந்தீவுக்கு அழைத்து வரப்பட்டனர்.

நெடுந்தீவுப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான உதயதாரகை படகு மூலம் கச்சதீவுக்கு சென்ற அதிகாரிகள் அவர்களை மீட்டு வந்திருந்தனர்.

நேற்று மாலை அவர்கள் நெடுந்தீவுக்கு திரும்பியதாக தெரிவிக்கப்படுகின்றது. நெடுந்தீவிலிருந்து பெருமளவான உணவுப் பொதிகள், பிஸ்கட் பெட்டிகள் பணம், பெருமளவான உணவுப் பொருட்கள் ஆகியன எடுத்துச் செல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று மாலை நெடுந்தீவு திரும்பிய 28 அகதிகளையும் பொறுப்பேற்றுக்கொண்ட நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் அவர்களை தமது பணிமனையில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## முத்து சிவலிங்கம் நேற்று அமைச்சராகப் பதவியேற்பு

(கொழும்பு)



இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவர் அமைச்சராகவும் பிரதியமைச்சராகவும் ஜனாதிபதி முன்னிலையில் நேற்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

தோட்ட வீடமைப்பு உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சராக முத்து சிவலிங்கம் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

அந்த அமைச்சின் பிரதியமைச்சராக எம்.எஸ். செல்லச்சாமி பதவிப்பிரமாணம் செய்துகொண்டார். (ச-08)

## இலங்கைக்கான கனேடியத் தூதுவருடன் கூட்டமைப்பு உறுப்பினர் நேற்று சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான கனேடியத் தூதுவர் திருமதி வெலேரே ரேமண்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளனர்

இச் சந்திப்பு நேற்றுக் காலை 10 மணி தொடக்கம் 12 மணி வரை நோர்வே தூதரகத்தில் நடைபெற்றது.

இச் சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராசசிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பத்மினி சிதம்பரநாதன், கஜேந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இலங்கையில் இழுபறிநிலையில் தேங்கிக் கிடக்கும் சமாதான முயற்சிகளை உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதையும் கனேடியத் தூதுவருக்கு வலியுறுத்தியதாக இச் சந்திப்பில் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் அரசியலில் ஆட்சிக்கு வரும் எந்தவொரு அரசாங்கமும் தமிழருடைய பிரச்சி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படை சிப்பாய் ஒருவர் சக சிப்பாயால் கொலை!

### காரைநகரில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கடற்படை முகாமில் கடற்படை சிப்பாய் ஒருவர் சக சிப்பாய் ஒருவரினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று மாலை 4 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இருவருக்குமிடையில் நீண்டகாலமாக காணப்பட்ட கருத்து முரண்பாடே இக் கொலைக்கு காரணம் என ஆரம்ப விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இச் சம்பவத்தின்போது கரந்தன கமரனாகே அஜித் குமார (வயது 22) என்ற சிப்பாயே கொல்லப்பட்டவர் ஆவார்.

இறந்த கடற்படைச் சிப்பாயின் சடலத்தை நீதிவான் மு. திருநாவுக்கரசு நேரில் சென்று

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இருவேறு விபத்தில் இருவர் படுகாயம்

(துன்னாலை)

வல்லைப் பாலத்தில் லொறியும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நெல்லியடியைச் சேர்ந்த நல்லையா பாஸ்கரன் (வயது 55) என்பவரே படுகாயமடைந்தவராவார். இவர் சிகிச்சைக்காக மந்திகை மருந்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை தெருமுடிமடத்தடியில் இரு மோட்டார் சைக்கிள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விசேட தூதுவர் சொல்ஹெய்ம் 16 ஆம் திகதி யாழ். வருகிறார்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டு நிலைமைகளை நேரில் ஆராய்வதற்கு விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமை யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளார்.

யாழ்ப்பாணம் வரும் இவர் அன்றைய தினம் பி.ப. 2 மணிக்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் சிவில் சமூக பிரதிநிதிகள் மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் ஆகியோருடன் சமாதான நடவடிக்கைகள் உள்ளிட்ட முக்கிய பல விடயங்கள் குறித்தும் விரிவாக ஆராயவுள்ளார். யாழ். விஜயத்தை முடித்துக் கொண்டு மறுநாள் 16 ஆம் திகதி முகமாலை ஊடாக கிளிநொச்சி சென்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தேசியத் தலைவர் பிரபாகரனை விட மிகவும் பயங்கரமானவர் கருணா

## ஜனாதிபதி சந்திரிகா வர்ணிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைவிட கருணாவே மிகப் பயங்கர மானவர் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துளளார்.

வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் மத்தியில் பேசிய ஜனாதிபதி, "கருணாவுக்கு அரசு ஏன் உதவி செய்யப் பின்னடிக்கிறது" என ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலே யே அவர் இதனைத் தொவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் பேசுகையில்,

கருணா என்பவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்தே பிரிந்து வந்தவர். புலிகளின் போராட்டத்தில் முக்கிய பங்கு வகித்தவர்.

எத்தனையோ சிங்கள அப்பாவி மக்களைக் கொன்று குவித்தவர். புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரனை விட மிகப் பயஙகர மானவர் கருணாதான்.

இதனை யுத்தகாலத்தில் நான் மட்டுமன்றி சகல மக்களும் அறிநதுள்ளார்கள்.

இத்தகைய பயங்கரவாதச் செயல்களில் முன்னோடியாக விருந்த கருணாவுக்கு நாம் தற போது உதவி செய்தால் மற்றுமோர் பயங்கரவாதம் உருவாகி விடும். அதாவது புலிகள் இதனைச் சாட்டாக வைத்து யுத்தத்தில் இறங்கி விடுவார்கள.

இவ்வாறு புலிகளுக்கு புகலிடம் அளித்த முன்னாள் ஜனாதிபதி அவர் வழங்கிய ஆயுதங்களாலேயே கொல்லப்பட்டதை நாம் மறக்கவில்லை.

இதேவேளை எந்தப் பிரச்சினைக்கும் ஆயுதப் பலாதகாரத்தைப் பிரயோகித்து தீர்வுகாண முடியாது. இதனால் தான் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அரசு விருமபுகின்றது என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார். (க)

# கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் ஆயுதக்குழுக்களா?

## மறுக்கிறது சமாதானப் பேரவை

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் ஆயுதக் குழுக்கள் தோற்றம் பெறறுள்ளதாகத் தெரிவிக்கப்படும் ஊடகச் செய்தி குறித்து வடக்கு-கிழக்கு முஸ்லிம் சமாதானப் பேரவை கண்டனம் தெரிவித்துள்ளது.

இச் செய்தியானது யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள கிழக்கு வாழ் முஸ்லிம் மக்களைப் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாக்கியுள்ள அதே வேளை, முஸ்லிம் மக்களை ஆயுததாரிகளாகக் காட்டுதல் மூலம அவர்களின் உரிமைகளை மழுஙகடிக்கும் வகையிலான திட்டமொன்றே செயறபடுத்தப் படுவதாக தற்போது சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக பேரவை சுட்டிக் காட்டியுள்ளது.

அதே நேரம், இவ்வாறான செய்திகளில் நம்பிக்கை கொள்ளாது, தமிழ்- முஸ்லிம் மக்கள் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டுமெனவும் பேரவை மேலும் கேட்டுள்ளது. (க-8)

# ஆன்மீகச் சொற்பொழிவு

(பருத்தித்துறை)

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் இடம்பெற்று வரும் வராந்த ஆன்மீகச் சொற்பொழிவில் நாளை ஞாயிற்றுக் கிழமை யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர். ஏ,சணமுகதாஸ் "வைஷணவ பக்தி" பற்றி உரையாற்றவுளளார். (க-52)

# தியாகி திலீபன் நினைவு தின கல்விசார் வேலைத்திட்டங்கள

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபனின் 17 ஆம் ஆண்டு நினைவு தினத்தை ஒட்டி கல்விசார் வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இவ் வேலைத் திட்டங்களில இரத்தானம், சிரமதானம் ஆகியவற்றுடன் மாணவருக்கான உதவித் திட்டங்கள், வறியமாணவருக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கல், பார்வை குறைந்த மாணவாகளுக்கு மூக்குக் கண்ணாடி வழங்கல், பாடசாலைகள் மற்றும் கிராமங்கள் தோறும் சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடாத்துதல் போன்றன அடஙகுகின்றன.

அத்துடன் பன்னிரெண்டு நாட்களும் பாடசாலைகள், தனியார் கலவி நிலையங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு தியாகி திலீபன் திருவுருவ பட்டியை அணிவித்தல், பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் தோறும திலீபன் நினைவு பதாதைகள் தொங்க விடல்,தமிழ்த் தேசிய உணர்வை ஊட்டும் முகமாக திலீபனின் கருத்துக்கள், வரலாற்று அம்சங்கள் மற்றும் போராட்ட நட வடிக்கைகள் போன்றவற்றை வழங்கும் கருத்தரங்குகளை நடாத்துதல போன்றவற்றை நிகழ்த்தவுள்ளதாகவும் கல்விக் கழகத்தினர் தெரிவித்துள்ளனர். (ற-5)

# கோதுமை மா தட்டுப்பாட்டை நீக்க பிறிமா நிறுவனம் நடவடிக்கை

(கொழும்பு)

நுகர்வோரின் தேவைகளைப பூர்த்தி செய்யும் அளவு விநியோகததை மேற்கொள்ளத் தவறியதாலேயே சந்தையில் கோதுமை மாவுககுப் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதாக பிறிமா நிறுவனம் தெரிவித்துள்ளது.

அரிசி மற்றும் சமையல் எரிவாயு ஆகியவற்றின் விலைகள் அதிகரிததுள்ளதால் பொது மக்கள் மா உற்பத்திப் பொருட்களை நாடத் தொடங்கியுள்ளனர்.

விலை அதிகரிப்பை எதிர்பார்த்திருக்கும் வர்த்தகர்கள் கோதுமை மாவைப் பதுக்கி வைக்கிறார்கள். இதன் காரணமாக அதன் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது என பிறிமா நிறுவனம் தெரிவித்துள்ளது.

நாள் ஒன்றிற்கு 2 ஆயிரம் மெற்றிக் தொன் கோதுமை மா நாடு பூராகவும் விநியோகிக்கப் பட்டாலும் சந்தையின தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அது போதுமானதாக இல்லை.

கோதுமை மாவைச் கூடுதலாக இறக்குமதி செய்வது பிரசசினைக்குத் தீர்வாக அமையும் என எதிர்பார்க்கபபட்டாலும், ஒரே தடவையில் அவ்வாறு செய்ய முடியாதென நிறுவனததின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறேனும், தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படுமென அவர் மேலும் உறுதியளிததுள்ளார். (யே)

# அரசாங்கத்தின் சலுகைகளில் குளிர்காய்கிறது ஜே.வி.பி.

## ரணில் குற்றச்சாட்டு

(கொழும்பு)



அரசாங்கத்தின் சலுகைகளை அனுபவித்துக் கொண்டு மக்களின் நலன்களுக்கு எதிராக ஜே. வி. பி. செயற்பட்டுவருவதாக எதிர்க்கட சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

கூட்டமைப்பு அரசாங்கம் தவறு செய்தால் அதனைப் பிரம்பால் அடித்து நல்வழிப்படுத்தப் போவதாக அன்று கூறிவந்த ஜே.வி.பி. இன்று அரச போகஙகளை அனுபவித்துக் கொண்டு, மக்களை நசுக்கும் வகையில் செயற்பட்டு வருவ தாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மாகாண சபைத் தேர்தலில் வெற்றிபெற்ற வேட்பாளர்களுக்கு கட்சியின் மறு சீரமைப்புத் தொடர்பாக நேற்றுமுன் தினம் பாராளுமன்றக் கூட்டத் தொகுதியில் நடைபெற்ற விளக்க மளிக்கும் கூட்டத்திலேயே அவா இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆறுமாதங்களாக ஆட்சி செய்துவரும் ஆளும் கூட்டமைப்பு அரசாங்கம் கடந்த தேர்தலின் போது அளித்த வாக்குறுதிகளை இன்னமும் நிறை வேற்றாமல் இருககிறது.

இதனால் அரசாங்கத்தின் மீதுள்ள மக்களின் நம்பிக்கை அற்றுப போகலாம எனவும் அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (ற-121)

# அரசாங்கத்தின் கொள்கைகளை இ.தொ.கா. கடைப்பிடிக்க வேண்டும்

## ஜே.வி.பி வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி அதன் பு,ரண ஆதரவை தற்போது ஆட்சிப் பீடத்தில் உள்ள கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு வழங்கு வதற்கு இணங்கியுள்ள நிலையில; கூட்டணியின் கொள்கைகளை அக்கட்சி கடைப்பிடிப்பது அவசியம் என ஜே.வி.பி.யின் பொதுச செயலாளர் ரில்வின் சில்வா வலியுறுத்தி தெரிவித்துள்ளார்.

களுத்துறை மண்டபத்தில் கடந்த புதன் கிழமை இடம்பெ ற்ற பொதுக் கலந்துரையாடல் ஒன்றில் கலந்து கொண்ட வேளை தொண்டமானின் இத்திடீர் கட்சித் தாவல் குறித்தக் கருத்துக் கூறியபோதே அவர் இத னைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் இதுபற்றித் தெரிவிக்கையில், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் இவ்முடிவானது பாராளுமன்றத்தில் ஆளும் கூட்டமைப்பு அரசாங்கத்துக்கு பெரும்பான்மையைப் பெற்றுத்தந்துள்ளது.

இருந்தாலும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கொள் கைகளை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியும் முழுமையாகக் கடை ப்பிடிப்பது அவசியம் எனவும் தெரிவித்தார். (க-121)

# அதிபர்களுக்கு செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

ஆங்கில மொழிமூலமான கற்பிதல் 6ம்,7ம், வகுப்பு மாணவர்களுக்கு மேற்கொள்ளும் பாடசாலைகளின் அதிபர்களுக் கான செயலமர்வுகள் தேசிய கல்வி நிறுவகத்தினால் அவிசாவளையிலுள்ள மீபே நிலையத்தில் நடத்தப்பட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியில் எதிர் வரும் 13ம் திகதி முதல் ஐந்து தினங்களுக்கும் 20ம் திகதி முதல் ஐந்து தினங்களுக்கும் செயலமர்வுகள் இடம் பெறும்.

கடந்த யூலை மாதம் ஆரம்பிக்கப்பட்ட இப்பயிற்சித் திட்டத்தில் ஒரு தொகுதி அதிபர்கள் ஏற்கனவே பயிற்றப்பட்டுள்ளனர். (த)

## அரசின் வரவு – செலவுத் திட்டத்தில்

# அரசாங்க ஊழியர்களுக்கான சம்பள உயர்வும் உள்ளடக்கம்


அடுத்தமாதம் அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு-செலவுத் திட்டத்தில் அரசாங்க ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படவுள்ளதாகவும் இச் சம்பள அதிகரிப்பு நவம்பர் மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்படும் மென்றும் அமைசசரவைப் பேச்சாளர் அமைச்சர் மங்களசமர வீர தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்கள் மாநாட்டிலேயே இத்தகவலை அமைச்சர் மங்கள சமர வீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் மங்கள சமர வீர மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது,

ஐக்கிய மக்களின் சுதந்திர முன்னணி அரசின் முதலாவது வரவு-செலவுத்திட்டம் அடுத்த மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இவ்வளவு செலவுத் திட்டத்தில் அரசாங்க ஊழியர்களின் சம்பள உயர்வு குறித்து அறிவிக்கப்படும் . நவமபர் மாதம் முதல் அதிகரிக்கப் படவுள்ள இச்சம்பள உயர்வு எத்தனை வீதமாக இருக்கும் என்பதை இப்போது கூறமுயாதுள்ளது என்றும் அச்செய்தி மாநாட்டில் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.(ம)





நீர்வேலி.சி.சி.த.க. பாடசாலையின் 125வது ஆண்டு நினைவு விழா பரிசளிப்பு விழாவும் அண்மையில் இடம் பெற்றன. இந்நிகழ்வில் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கல்லூரி அதிபர் ஸ்ரீஸ்கந்த மூர்த்தி பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு மங்கள் விளக்கேற்றி இதனை ஆரம்பித்து வைப்பதையும்,

பாடசாலையின் 125வது ஆண்டு நிறைவு விழாச் சிறப்பு மலரினை, அத்தியார் இந்துக் கல்லூரி அதிபர் இ.குணநாதன் வெளியிட்டு வைப்பதனையும் படங்களில் காணலாம்

# நல்லூரான் திருவடிக்கு



## இருபத்திரெண்டாம் திருவிழா

### பெருமானே நீயே கதி

சூரபன்மன் தன்னைத் தலையறுத்து மாமயில்மேல்
வீரவேல் கொண்டு விளையாடும் - பேருடனே
சேவற்கொடி யசையத் திருநல்லைப் பதியுறையும்
காவலனே நீயே துணை
சிறைமீண்ட தேவன் திருமகள் தெய்வானை
மருவிச் சுகித்த வடிவேலா - முறைகண்ட
திருநல்லை யுரதனில் சீருடனே வாழும்
பெருமானே நீயே துணை

கவிமணி கந்தமுருகேச தாசனார்

### வழி கூறு ஐயனே

அமு தென்ற தமிழுக்கு தலைவனே
அத் தமிழுக்குள் அமுதென உறைபவனே
வல்லவனே சேவற் கொடியோனே
நல்லை நகர்ப் பதியினிலே
கொண்டைப் பெண்டிருடன்
ஆட்சிபுரிபவனே அழகனே
புள்ளி மயில் மீதினிலே
புவனம் சிறக்க வருபவனே
உள்ளம் உருகி உந்தன்
பாதம் தொழுகின்றேன்
தமிழினம் உய்ய வழி
கூறுவாய் ஐயனே!

புலோலியுர் K.T. அரவிந்த்

### நல்லூரில் அரசாளும் தமிழழகே

பழநி மலை மீதிருந்து பைந்தமிழைக் கொண்டவனே
பனுவலுடன் தமிழ்காக்க அவைதனிலே வந்தவனே
கண்ணுதற் கெட்டாத காருண்யமா மலையே
காலமெல்லாம் நல்லூரில் அரசாளும் தமிழழகே!

வட்டூர் வரதர்

### முத்தியும் கை கூடுமே!

பொதி செய்யுடம்பை போற்றி
மோக சாகரத்துள் மூழ்கி
மதிகெட்டு மயக்கத்தி லூறி
மனது பொறாதுழன்று
விதியென்றே வீண்ணாளை
போக்கி சுகம் கொள்ளாதே!
ஆதி சங்கரன் சேயோன் அனாதி
தெய்வமாம் நல்லை வேலை
கதி யென்றவன் கழல் பற்றி
காதலித்துருகி தொழுதால்
கொதி கொள் விலங்குமோடும்
கொல்லும் கூற்று மஞ்சுமே!
நதி போலோடும் வாழ்வை நம்பி
நடைப் பிணமாயலைந்து
நாதியற்று நாயிலும் கடையரோ
வென நாளு மேங்காது
பதியாயுறைந்து பாழ் வினை
யறுக்கும் கந்தனை பணிந்தால்
மேதினியில் மேன்மை பெற்றுய்யலாம்
முத்தியும் கை கூடுமே!

கந்த தியாகராசா
கோண்டாவில் கிழக்கு

### எப்படித் தான் சொல்வேனோ

நல்லையிலே வீற்றிருக்கும் கந்தா வடிவேலா
உனை நம்பி கோடியுயிர் சேருதே பாதமதில்
அத்தனைக்கும் அருள்புரியும் வேலவனே
உன்பெருமை எப்படித்தான் சொல்வேனோ

தென்புலோலி
ஆ. பிரேமச்சந்திரன்

# சமாதான நடவடிக்கைகள் குறித்து எவரும் வாய்திறக்க வேண்டாம்

## ஜனாதிபதி ஆளுங்கட்சியிடம் கோரிக்கை

(கொழும்பு)

கடந்த சில வாரங்களாக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அமைச்சர்கள் பலரும் நாட்டின் தற்போதைய சமாதானப் பேச்சு வார்த்தைகள், யுத்த நிறுத்தம், தமிழீழ விடுதலைப் புலிகள் அரசாங்கத்திடம் சமர்ப்பித்த இடைக் கால நிர்வாகத்திட்டம் போன்றன குறித்துப் பலவித கருத்துக்களையும் முன் வைத்து வருவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

குறிப்பாக ஜே.வி.பி.அங்கத்தவர்கள் பலரும் மிகக்கடுமையான வாதப் பிரதிவாதங்களை இது குறிதது முன்வைத்து வரும் நிலையில், கட்சிக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் எந்தவொரு பிரதிநிதியும் தறபோதைய சமாதான முயற்சிகள் குறித்து எந்தக் கருத்தையும் வெளியிட வேண்டாமெனவும், அந்த விடயத்தைத் தான் மட்டும் பார்த்துக் கொள்வதாகவும் ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தற்போதைய சமாதான நிலைபாடுகள் குறித்துக் கருத்துக் கூற விருப்புவோர், நேரடியாகத் தன்னுடன் பேசும்படியும் அதற்கான முழு விளக்கத்தினையும் தரத் தான் தயாராகவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க-121)

# வடக்கு - கிழக்கு மாகாணத்தில் சட்டவிரோதமாக இயங்கிவரும் சிறுவர் இல்லங்கள் மூடப்படும்!

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் சட்டவிரோதமாக இயங்கிவரும் சிறுவர் இல்லங்களை மூடிவிடத் தீர்மானித்துள்ளதாக மாகாண சிறுவர் பாதுகாப்பு ஆணையாளர் திருமதி என்.ஆர்.ரஞ்சன் தெரிவித்துள்ளார்.

இத்தகைய இல்லங்களில் சிறுவர்களுக்கு எதிரான குற்றச் செயல்கள அதிகரித்துவருவதாகவும், அவற்றைக் கட்டுப்படுத்தும் விதத்தில் சிறுவர் இல்ல நிர்வாகிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இதற்கு யுனிசெவ் நிறுவனம் உதவ முன்வந்திருப்பதாகவும் திருமதி ரஞ்சன் மேலும் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 157 சிறுவர் இல்லங்கள் இயங்கி வருகின்றன.

இவற்றில் 65 இல்லங்கள் மாத்திரமே பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இங்கு இடம்பெறும் சிறுவர் துஷ்பிரயோகங்கள், துன்புறுத்தல்கள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு மாவட்ட மட்டத்தில் சிறுவர் பாதுகாப்புக்குழுக்கள் விரைவில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இந்நிலையில், கடந்த கால யுத்தசூழ் நிலையும், அரசசார்பற்ற நிறுவனங்கள்வழங்கும்பண உதவி ஊக்குவிப்புமே சட்ட விரோத சிறுவர் இல்லங்கள் உருவாவதற்கு காரணமாக அமைந திருக்கின்றன எனச் சுட்டிக்காட்டப் படுகின்றது. (யே)

# 'ருபெல்லா' தடைமருந்தேற்றல் இன்று முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில்உள்ள 16 வயது முதல் 20 வயது வரையான ஆண், பெண் இருபாலாருக்கும இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் 'சின்ன முத்து - ருபெல்லா' நோய்களுக்கு எதிரான தடுபபு மருந்தேற்றப்படவுள்ளது.

அதற்கமைய கிராம சேவையாளர் பிரிவுகளும் அவர்கள் செல்ல வேண்டிய மருந்தேற்றும் நிலையங்களும் வருமாறு,

1.கி.சே.பிரிவுJ/ 61,62,63, 64,65,66 இல் வசிப்பவர்கள் - சுவாமியார் கிளினிக் நிலையம் சுவாமியார் வீதி, கொழும்புத்துறை.

2.f pNr.ghpT J/68ᴬ,68ᴮ, 70இல் வசிப்பவர்கள்-C,D,M,H (சின்னாஸ் பத்திரி) கடற்கரை வீதி, குருநகர்.

3.[illegible].சே.பிரிவுJ/ 67,75இல் வசிப்பவர்கள்- மாணவர் படிப்பகம்,இராஜசிங்கம் வீதி, திருநகர்.

4.கி.சே.பிரிவு J/ 69, 71,72இல் வசிப்பவர்கள்-ஆவே மரியாள் பெண் பாடசாலை 3ம்குறுக்குத்தெரு,குருநகர்.

5.கி.சே.பிரிவுJ/ 73,74,76, 78இல் வசிப்பவர்கள்-யூபிலி மகப்பேற்று நிலையம் மவுண்காமல் வீதி, யாழ்ப்பாணம்.

6.கி.சே.பிரிவுJ/ 79,80,82,87, 88,101இல் வசிப்பவர்கள்-நாவலர் மகப்பேறறு நிலையம்,கீரிப்பிள்ளையார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

7.கி.சே.பிரிவு J/ 81,83,86 இல் வசிப்பவர்கள்-கொட்டடி நமசிவாயம் பாடசாலை ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி.

8.கி.சே.பிரிவுJ/ 84,85இல் வசிப்பவர்கள-சென் நக்கிலஸ் R.C.பாடசாலை நாவலர் வீதி, நாவாந்துறை.

9.கி.சே.பிரிவுJ/ 77,91,92,93, 94,95,96 இல் வசிப்பவர்கள்-அரியாலை மகப்பேற்று நிலையம் கலைமகள் வீதி, அரியாலை மேற்கு.

10.கி.சே.பிரிவுJ/ 97,98,99, 100இல் வசிப்பவர்கள்-வண்ணார் பண்ணை கிளினிக் கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

11.கி.சே.பிரிவு J/ 106, 107, 108இல் வசிப்பவர்கள்-நல்லூர் முருகன் சனசமூக நிலையம் செட்டித்தெரு நல்லூர்.

12.கி.சே.பிரிவுJ/ 109 இல் வசிப்பவர்கள்-நல்லூர் கிளினிக் நிலையம் நல்லூர் குறுக்கு வீதி, நல்லூர்.

13.கி.சே.பிரிவு J/102, 103,104,105 இல் வசிப்பவர்கள்- கலைமகள் சனசமூக நிலையம் ஆத்திசூடி வீதி, யாழ்ப்பாணம்.

இதேவேளை தனியார் கல்வி நிறுவனங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு,விக்னா கல்வி நிறுவனம் ஸ்ரான்லி வீதி,புதிய விஞ்ஞானக கல்லூரி கன்னாதிட்டி, டானியல் (DMI) ஸ்ரான்லி றோட் ஆரிய குளச்சந்தி, பொருளியல் கல்லூரி 243,நாவலர் வீதி, சயன்ஸ் ஹோல் (SCIENCE HALL)கன்னாதிட்டி ஆகிய வற்றில் தடுப்பு மருந்து ஏற்றப்படவுள்ளது. (க)


BOC

# இலங்கை வங்கி

## பகிரங்க ஏல விற்பனை பற்றிய அறிவித்தல்

இலங்கை வங்கியின் பின்வரும் கிளைகளில் 30.06.2003 ஆம் திகதி வரை அடகு வைக்கப்பட்டு இது வரை மீட்கப்படாத நகைகள் யாவும் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள எமது யாழ்ப்பாணம் மேற்தரக் கியைில் இம் மாதம் 25ம், 26ம் திகதிகளில் காலை 9.00 மணி முதல் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என அறியத்தருகின்றோம்.

- யாழ்ப்பாணம் மேற்தரக் கிளை
- யாழ்.இரண்டாம் கிளை (ஸ்ரான்லி வீதி)
- பருத்தித்துறை
- மானிப்பாய்
- சுன்னாகம்

இந்நகைகள் மீட்கப்பட வேண்டிய கடைசித் திகதி 24.09.2004

அறிவித்தலின்றி ஏல விற்பனைத் திகதியை ஒத்திப்போடும் உரிமை வங்கிக்கு உள்ளது.

உதவிப் பொது முகாமையாளர்
(வட பிராந்தியம் - யாழ்ப்பாணம்)

11.09.2004 (C/445)

# தமிழீழ மீட்புநிதிக் கடன் மீ

**மீளளிப்பு நடைமுறைகள்:**

1.கடன் சான்றிதழாளர் நேரடியாக வருகை தந்து கடனை மீளப்பெற வேண்டும்.

2.ஒருவர் சார்பில் மற்றொருவர் கடனைச் செலுத்தியிருப்பின் இருவரும் வருகைதரவேண்டும்.

3.கடன் சான்றிதழாளர் இறந்திருப்பின் பின்வரும் ஆவணங்களைப் பின்னுரித்தாளர் கொண்டுவரவேண்டும்.

- *இறப்புச் சான்றிதழ்*
- *இறப்புச் சான்றிதழின் படி (பிரதி)*
- *கடன் சான்றிதழ்*
- *பின்னுரித்தாளரின் அடையாள ஆவணம்*
- *பின்னுரித்தாளரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தும் கிராமசேவையாளரின் கடிதம்.*

4.கடன் சான்றிதழிலுள்ள முழுப்பெயரும் அடையாள ஆவணத்திலுள்ள முழுப்பெயரும் வேறுபடுமிடத்து இரண்டு பெயர்களும் ஒருவரையே குறிக்கின்றதென்பதை உறுதிப்படுத்தி கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட கடிதம்.

5.அ).மீளளிப்பிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் சான்றிதழாளர் தமது அடையாள ஆவணத்தைக் காண்பித்தே கடனை மீளப்பெறமுடியும்.

ஆ).அடையாள ஆவணம் அற்றவர் தமது புகைப்படத்தின் (2.5 அங்.2.0அங். அளவு) பின்புறத்தில் தமது பெயர், முகவரி, கையொப்பம் ஆகியவற்றை உதவி அரசாங்க அதிபரால் உறுதிப்படுத்திக் கையளிப்பின் அது ஏற்றுக்கொள்ளப்படும்.

## சங்கானை உதவி அரச அதிபர் பிரிவு

| | |
|---|---|
| 152.யா/ச/4994 | திரு. முருகன் கதிரவேலு |
| 153.யா/ச/5052 | திரு. செல்வநாயகம் ஆறுமுகம் |
| 154.யா/ச/5084 | திருமதி. இரத்தினேஸ்வரி இரத்தினம் |
| 155.யா/ச/5087 | திரு. வைரவி செல்லத்துரை |
| 156.யா/ச/5091 | திரு. செல்லப்பா சீவரத்தினம் |
| 157.யா/ச/5098 | செல்வி. புஸ்பதேவி செல்லத்துரை |
| 158.யா/ச/5135 | திரு. பிள்ளையான் சின்னத்துரை |
| 159.யா/ச/5182 | திரு. சின்னத்தம்பி திருநாவுக்கரசு |
| 160.யா/ச/5235 | திரு. வேலுப்பிள்ளை கனகசபாபதி |
| 161.யா/ச/5247 | திருமதி. இராசமலர் சிவப்பிரகாசம் |
| 162.யா/ச/5258 | திரு. மாணிக்கம் மகேந்திரன் |
| 163.யா/ச/5307 | திருமதி. அன்னம்மா முத்தையா |
| 164.யா/ச/5320 | திருமதி. சிவக்கொழுந்து தம்பையா |
| 165.யா/ச/5380 | திருமதி. பொன்னம்மா கந்தையா |
| 166.யா/ச/5390 | திரு. சபாரத்தினம் நடராசா |
| 167.யா/ச/5433 | திரு. சதாசிவம் செல்லையா |
| 168.யா/ச/5447 | திருமதி. பொன்னம்மா சண்முகநாதன் |
| 169.யா/ச/5470 | திரு. செல்லர் பூபாலசிங்கம் |
| 170.யா/ச/5480 | திருமதி. தெய்வானைப்பிள்ளை மாரிமுத்து |
| 171.யா/ச/5539 | திரு. வினாசித்தம்பி கந்தையா |
| 172.யா/ச/5551 | திருமதி. சிவகாமிப்பிள்ளை தம்பையா |
| 173.யா/ச/5578 | திரு. சுப்பிரமணியம் அருளம்பலம் |
| 174.யா/ச/5585 | திரு. சின்னையா மார்க்கண்டேயர் |
| 175.யா/ச/5598 | திரு. இராசகாரியார் கந்தசாமி |
| 176.யா/ச/5601 | திரு. இளையதம்பி செல்லையா |
| 177.யா/ச/5609 | திரு. துரையப்பா சிவநேசராசா |
| 178.யா/ச/5610 | திருமதி. சுசீலா ஆனந்தராசா |
| 179.யா/ச/5611 | திருமதி. மீனாட்சிப்பிள்ளை சுப்பையா |
| 180.யா/ச/5615 | திரு. இலட்சுமணன் நடராசா |
| 181.யா/ச/5618 | திரு. செல்லர் கந்தையா |
| 182.யா/ச/5676 | திருமதி. தங்கம்மா கனகசபை |
| 183.யா/ச/5685 | திருமதி. செல்லம்மா கந்தையா |
| 184.யா/ச/5736 | திரு. நடராசா கந்தஞானியார் |
| 185.யா/ச/5748 | திரு. இராமநாதர் கந்தமுத்து |
| 186.யா/ச/5806 | திரு. நாகலிங்கம் வேலுப்பிள்ளை |
| 187.யா/ச/5837 | திரு. கந்தசாமி குமரகுரு |
| 188.யா/ச/5846 | திரு. வேலன் மினாசி |
| 189.யா/ச/5887 | திருமதி. இரஞ்சிதராணி வசந்தகுமார் |
| 190.யா/ச/5897 | திரு. வல்லிபுரம் நல்லையா |
| 191.யா/ச/5902 | திரு. வையாபுரி அப்புத்துரை |
| 192.யா/ச/5919 | திரு. கணபதிப்பிள்ளை சிவசம்பு |
| 193.யா/ச/5949 | திரு. தம்பையா வீரகத்தி |
| 194.யா/ச/5951 | திருமதி. ஜெயந்தி குலேந்திரன் |
| 195.யா/ச/6004 | திருமதி. தவபாக்கியம் மதியாபரணம் |
| 196.யா/ச/6059 | திரு. அருணாசலம் நடராசா |
| 197.யா/ச/6060 | திருமதி. நாகம்மா செல்லையா |
| 198.யா/ச/6066 | திருமதி. கனகம்மமா பாலசிங்கம் |
| 199.யா/ச/6079 | திரு. இராசா சுப்பிரமணியம் |
| 200.யா/ச/6085 | திருமதி. நாகம்மா கனசபை |
| 201.யா/ச/6104 | திரு. துரைராசசிங்கம் நிர்மலசிங்கம் |
| 202.யா/ச/6172 | திருமதி. அன்னலட்சுமியம்மா சின்னத்துரை |
| 203.யா/ச/6181 | திரு. சிவந்தான் சிவந்தான் |
| 204.யா/ச/6216 | திரு. வைரவப்பிள்ளை மயில்வாகனம் |
| 205.யா/ச/6275 | திரு. பரராசசேகரம் கோகிலதாஸ் |
| 206.யா/ச/6315 | திரு. கனகசபை கந்தையா |
| 207.யா/ச/6346 | திரு. கதிர்காமத்தம்பி பாலச்சந்திரா |
| 208.யா/ச/6371 | திருமதி. சத்தியம்மா கனகநாயகம் |
| 209.யா/ச/6386 | திருமதி. தேவி சிவஞானம் |
| 210.யா/ச/6425 | திரு. தம்பு சுப்பிரமணியம் |
| 211.யா/ச/6480 | திரு. செல்லப்பா கந்தையா |
| 212.யா/ச/6506 | திருமதி. செல்வம் முருகன் |
| 213.யா/ச/6555 | திருமதி. நாகம்மா சிவப்பிரகாசம் |
| 214.யா/ச/6569 | திருமதி. சௌபாக்கியலட்சுமி ஜெயரத்தினம் |
| 215.யா/ச/6666 | திரு. சிவசம்பு வரதராசா |
| 216.யா/ச/6676 | திரு. இளையதம்பி நடராசா |
| 217.யா/ச/6697 | திருமதி. வள்ளிநாயகி கந்தசாமி |
| 218.யா/ச/6728 | திரு. வேலுப்பிள்ளை இராசதுரை |
| 219.யா/ச/6777 | திருமதி. புவனேஸ்வரி புண்ணியமூர்த்தி |
| 220.யா/ச/6801 | திருமதி. பொன்னம்மா நடராசா |
| 221.யா/ச/6856 | திரு. தர்மலிங்கம் தவக்குமார் |
| 222.யா/ச/6869 | திரு. கந்தர் துளசிமாலை |
| 223.யா/ச/6875 | திரு. நாகேசு கந்தையா |
| 224.யா/ச/6891 | திரு. சுப்பிரமணியம் வீரசிங்கம் |
| 225.யா/ச/6901 | திருமதி. இராசம்மா இராசசுந்தரம் |
| 226.யா/ச/6936 | திரு. கதிரேசர் அப்புத்துரை |
| 227.யா/ச/6943 | திருமதி. விசாலாட்சி வேலுப்பிள்ளை |
| 228.யா/ச/6957 | திரு. காசிப்பிள்ளை தங்கராசா |
| 229.யா/ச/7028 | திருமதி. தங்கம்மா பொன்னையா |
| 230.யா/ச/7044 | திரு. நாகலிங்கம் குமரகுருநாதன் |
| 231.யா/ச/7065 | திரு. ஆறுமுகம் சிவலிங்கம் |
| 232.யா/ச/7080 | திரு. வேலு கதிர்காமு |
| 233.யா/ச/7090 | திரு. பொன்னர் கந்தசாமி |
| 234.யா/ச/7108 | திரு. தில்லையம்பலம் தேவராசா |
| 235.யா/ச/7112 | திருமதி. இலட்சுமி கந்தன் |

## தெல்லிப்பளை உதவி அரச அதிபர் பிரிவு

| | |
|---|---|
| 1.யா/தெ/16 | திருமதி. தங்கரத்தினம் நல்லதம்பி |
| 2.யா/தெ/115 | திரு. சின்னத்தம்பி பொன்னுத்துரை |
| 3.யா/தெ/144 | திருமதி. புஸ்பராணி ஜெயசிங்கம் |
| 4.யா/தெ/149 | திரு. சரவணமுத்து பரநிருபசிங்கம் |
| 5.யா/தெ/150 | திரு. ஞானப்பிரகாசம் பத்திநாதர் |
| 6.யா/தெ/152 | திரு. நல்லதம்பி செல்லத்துரை |
| 7.யா/தெ/154 | திரு. ஞானபிரகாசம் பத்திநாதர் |
| 8.யா/தெ/190 | திரு. முத்து தில்லைநடராசா |
| 9.யா/தெ/231 | திருமதி. ஜெயந்தி ஸ்கந்தகுமார் |
| 10.யா/தெ/252 | திரு. இளையதம்பி சின்னையா |
| 11.யா/தெ/336 | திருமதி. சரஸ்வதி சுப்பிரமணியம் |
| 12.யா/தெ/396 | திருமதி. சந்திரவதனா அருளம்பலம் |
| 13.யா/தெ/520 | திருமதி. ஸ்ரீசத்தியபாமா நித்தியானந்தம் |
| 14.யா/தெ/600 | திரு. கணபதி மார்க்கண்டு |
| 15.யா/தெ/615 | திரு. விஸ்வலிங்கம் முருகையா |
| 16.யா/தெ/616 | திருமதி. இந்திராணி வடிவேல் |
| 17.யா/தெ/686 | திரு. சிதம்பரப்பிள்ளை பொன்னம்பலம் |
| 18.யா/தெ/687 | திரு. மயிலு பசுபதி |
| 19.யா/தெ/716 | திருமதி. நிர்மலா தாமோதரம்பிள்ளை |
| 20.யா/தெ/781 | திரு. பொன்னுச்சாமி ஐயாத்துரை |
| 21.யா/தெ/789 | திரு. தாமு ஐயம்பிள்ளை |
| 22.யா/தெ/877 | திரு. வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் |
| 23.யா/தெ/890 | திரு. வேலுப்பிள்ளை முத்தையாப்பிள்ளை |
| 24.யா/தெ/896 | திருமதி. ஞானேஸ்வரி பாலசிங்கம் |
| 25.யா/தெ/908 | திரு. பொன்னம்பலம் யோகலிங்கம் |
| 26.யா/தெ/956 | திரு. சின்னத்தம்பி செல்லத்துரை |
| 27.யா/தெ/978 | திரு. நல்லப்பா சரவணமுத்து |
| 28.யா/தெ/1001 | செல்வி. மனோன்மணி சின்னத்தம்பி |
| 29.யா/தெ/1016 | திரு. சின்னத்தம்பி கந்தையா |
| 30.யா/தெ/1032 | திரு. வினாயகர் கந்தையா |
| 31.யா/தெ/1033 | திரு. சின்னத்தம்பி கந்தசாமி |
| 32.யா/தெ/1062 | திரு. சபாபதி கதிரமலை |
| 33.யா/தெ/1069 | திரு. சின்னத்துரை சண்முகநாதன் |
| 34.யா/தெ/1071 | திருமதி. சிவமணி விஜயகுமாரன் |
| 35.யா/தெ/1115 | திரு. நாகநாதர் கணபதிப்பிள்ளை |
| 36.யா/தெ/1138 | திரு. பொன்னுத்துரை தங்கராசா |
| 37.யா/தெ/1144 | திரு. சுப்பிரமணியம் முருகையா |
| 38.யா/தெ/1168 | திரு. நாகலிங்கம் இராமநாதன் |
| 39.யா/தெ/1189 | திரு. செல்லப்பா சந்திரசேசரம் |
| 40.யா/தெ/1264 | திருமதி. ஞானசோதி சின்னத்தமபி |
| 41.யா/தெ/1276 | திரு. இராஜேந்திரா அரவிந்தன் |
| 42.யா/தெ/1370 | திரு. காசிப்பிள்ளை கதிர்காமத்தம்பி |
| 43.யா/தெ/1374 | திருமதி. தன்லட்சுமி தாமோதரம்பிள்ளை |
| 44.யா/தெ/1383 | திரு. கந்தசாமி வைரவநாதன் |
| 45.யா/தெ/1489 | திரு. கந்தையா இராசநாயகம் |
| 46.யா/தெ/1493 | திரு. சரவணமுத்து சண்முகநாதன் |
| 47.யா/தெ/1528 | திரு. சேனாதிராசா சிதம்பரஉடையார் |
| 48.யா/தெ/1557 | திரு. சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை |
| 49.யா/தெ/1564 | திரு. தில்லையம்பலம் அருமைநாயகம் |
| 50.யா/தெ/1566 | திரு. தில்லையம்பலம் அருமைநாயகம் |
| 51.யா/தெ/1593 | திரு. விசுவலிங்கம் இரங்கநாதன் |
| 52.யா/தெ/1646 | திரு. கிருஷ்ணர் சின்னையர் |
| 53.யா/தெ/1784 | திரு. வைரவி வல்லிபுரம் |
| 54.யா/தெ/1828 | திரு. சரவணமுத்து சுப்பிரமணியம் |
| 55.யா/தெ/1864 | திரு. மயில்வாகனம் விக்கினேஸ்வரன் |
| 56.யா/தெ/1887 | திரு. அப்புத்துரை நாகலிங்கம் |
| 57.யா/தெ/1957 | திரு. சண்முகம் கனகசபை |
| 58.யா/தெ/1972 | திரு. மோசஸ் செபமாலை |
| 59.யா/தெ/1991 | திருமதி. இராசம்மா வல்லிபுரம் |
| 60.யா/தெ/2133 | திரு. சின்னையா அம்பிகைபாகன் |
| 61.யா/தெ/2157 | திரு. செல்லையா சிவசுப்பிரமணியம் |
| 62.யா/தெ/2158 | திரு. சின்னத்தம்பி அசோக்குமார் |
| 63.யா/தெ/2198 | திரு. நல்லதம்பி குருசாமி |
| 64.யா/தெ/2228 | திரு. சேனாதிராஜா சிதம்பரஉடையார் |
| 65.யா/தெ/2254 | திரு. இளையதம்பி சரவணமுத்து |
| 66.யா/தெ/2368 | திரு. இளையவர் நவசிவாயம் |
| 67.யா/தெ/2371 | திரு. இளையவர் நமசிவாயம் |
| 68.யா/தெ/2391 | திரு. சுப்பிரமணியம் கந்தையா |
| 69.யா/தெ/2399 | திரு. பாலசுந்தரக்குருக்கள் கெங்காதரசர்மா |
| 70.யா/தெ/2467 | திரு. அருளம்பலம் வீரசிங்கம் |
| 71.யா/தெ/2515 | திருமதி. அழகம்மா சுந்தரம்பிள்ளை |
| 72.யா/தெ/2571 | திருமதி. செல்வநாயகி குமாரசாமி |
| 73.யா/தெ/2651 | திரு. சீனிவாசகம் ஜெயநாதன் |
| 74.யா/தெ/2880 | திரு. முத்து சின்னத்துரை |
| 75.யா/தெ/2987 | செல்வி. இரத்தினமலர் வல்லிபுரம் |
| 76.யா/தெ/2999 | செல்வி. இதயகுமாரி கனகரத்தினம் |
| 77.யா/தெ/3002 | திரு. சின்னத்தம்பி சத்தியலோகநாதன் |
| 78.யா/தெ/3013 | திரு. கந்தசாமி சிறீதரன் |
| 79.யா/தெ/3050 | திருமதி. கலாவதி கருணாந்தசிவம் |
| 80.யா/தெ/3088 | திரு. இளையதம்பி சின்னத்தம்பி |
| 81.யா/தெ/3095 | திரு. கிருஷ்ணர் சிவப்பிரகாசம் |
| 82.யா/தெ/3112 | திரு. இராசநாயகம் இடபாரூடன் |
| 83.யா/தெ/3139 | திரு. பொன்னம்பலம் கைலாசபிள்ளை |
| 84.யா/தெ/3161 | திருமதி. உருக்குமணி இரத்தினம் |
| 85.யா/தெ/3162 | திரு. சீனியர் குணரத்தினம் |
| 86.யா/தெ/3198 | திருமதி. பர்வதம் விசுவலிங்கம் |
| 87.யா/தெ/3243 | திரு. இளையதம்பி வல்லிபுரம் |
| 88.யா/தெ/3334 | திரு. பொன்னையா நடரா |
| 89.யா/தெ/3387 | திருமதி. பகவதி இரத்தி |
| 90.யா/தெ/3412 | திருமதி. பரிமளம் பிள்ளை |
| 91.யா/தெ/3427 | திரு. [illegible]முகம் [illegible] |
| 92.யா/தெ/3453 | திரு. [illegible]த்திகேசு [illegible] |
| 93.யா/தெ/3496 | திரு. கந்தையா விஜயரத் |
| 94.யா/தெ/3505 | செல்வி. கோசலாதேவி |
| 95.யா/தெ/3509 | திரு. சின்னப்பு குணரத்தி |
| 96.யா/தெ/3527 | திரு. கணபதி கிருஷ்ணர் |
| 97.யா/தெ/3653 | திரு. கந்தப்பிள்ளை சிவ |
| 98.யா/தெ/3672 | செல்வி. அமுதினி சின்ன |
| 99.யா/தெ/3677 | திரு. பொன்னுத்துரை பத் |
| 100.யா/தெ/3683 | திரு. முருகேசு இராசசிங் |
| 101.யா/தெ/3693 | திருமதி. அம்மாப்பிள்ளை |
| 102.யா/தெ/3705 | திருமதி. புனிதவதி கந் |
| 103.யா/தெ/3828 | திருமதி. சத்திஸ்வரி சிவ |
| 104.யா/தெ/3978 | திரு. முத்தையா சிவசுத |
| 105.யா/தெ/3986 | திருமதி. இரத்தினம் இரா |
| 106.யா/தெ/4067 | திருமதி. கமலாம்பிகை |
| 107.யா/தெ/4148 | திருமதி. இராசம்மா சுந்த |
| 108.யா/தெ/4310 | திரு. கந்தையா நடராசா |
| 109.யா/தெ/4354 | செல்வி. ரஞ்சிதமலர் சீனி |
| 110.யா/தெ/4371 | திரு. செந்தில்நாதன் ஐய |
| 111.யா/தெ/4462 | திருமதி. நாகேஸ்வரிஅம் |
| 112.யா/தெ/4502 | செல்வி. சிவதேவி சிங்கா |
| 113.யா/தெ/4503 | திருமதி. பேரின்பநாய [illegible] |
| 114.யா/தெ/4509 | திரு. அகுஸ்தீன் செபமா |
| 115.யா/தெ/4510 | திரு. வையிரமுத்து பால |
| 116.யா/தெ/4525 | திருமதி. வரோனிக்கா மா |
| 117.யா/தெ/4552 | திரு. நாகர் கிருஷ்ணர் |
| 118.யா/தெ/4578 | திருமதி. பொன்மணி கந் |
| 119.யா/தெ/4585 | திரு. அருணாசலம் விஸ் |
| 120.யா/தெ/4598 | திரு. கந்தவனம் கதிர்கா |
| 121.யா/தெ/4613 | திருமதி. நாகம்மா கந்தை |
| 122.யா/தெ/4643 | திரு. பொன்னு சிவசுப்பிர |
| 123.யா/தெ/4651 | திரு. தாமோதரம்பிள்ளை |
| 124.யா/தெ/4673 | திருமதி. மனோன்மணி அ |
| 125.யா/தெ/4703 | திரு. தம்பிமுத்து குகதா |
| 126.யா/தெ/4730 | திரு. முருகேசு நாகரத்தி |
| 127.யா/தெ/4756 | திரு. இராசா சிவராசா |
| 128.யா/தெ/4758 | திரு. முருகேசு சபாபதி |
| 129.யா/தெ/4782 | திரு. சடையர் சீனியர் |
| 130.யா/தெ/4804 | திரு. வயிரவி நன்னித்தம் |
| 131.யா/தெ/4816 | திரு. இராசையா பொன்னு |
| 132.யா/தெ/4852 | திரு. அம்பலப்பிள்ளை செ |
| 133.யா/தெ/4859 | திரு. நல்லதம்பி துரைராச |
| 134.யா/தெ/4891 | திருமதி. ஞானம்பிகை ந |
| 135.யா/தெ/4964 | திரு. கதிர்காமு இராசைய |
| 136.யா/தெ/5014 | திரு. சின்னத்தம்பி நாகரத் |
| 137.யா/தெ/5015 | திருமதி. சின்னத்தங்கச்சி |
| 138.யா/தெ/5174 | திரு. முருகேசு இராமலிங் |
| 139.யா/தெ/5193 | திரு. செல்லப்பா சின்னத் |
| 140.யா/தெ/5194 | திருமதி. தனேஸ்வரி கண |
| 141.யா/தெ/5199 | திரு. சந்தியா செபஸ்தி |
| 142.யா/தெ/5227 | திரு. மகாரத்தினம் கருண |
| 143.யா/தெ/5280 | திரு. சின்னத்தம்பி கதிரவே |
| 144.யா/தெ/5292 | திருமதி. கெங்கையம்மா |
| 145.யா/தெ/5307 | திருமதி. செல்வமலர் தர்ம |
| 146.யா/தெ/5340 | திரு. வேலுப்பிள்ளை தம் |
| 147.யா/தெ/5355 | திரு. வேலுப்பிள்ளை சுப் |
| 148.யா/தெ/5356 | திருமதி. மகேஸ்வரி கந் |
| 149.யா/தெ/5451 | திரு. சின்னத்துரை செல்வ |
| 150.யா/தெ/5481 | திரு. கார்த்திகேசு கந்தை |
| 151.யா/தெ/5485 | திருமதி. [illegible]னோன்[illegible] வ |
| 152.யா/தெ/5494 | திரு. மாணிக்கம் சின்னத் |
| 153.யா/தெ/5538 | திருமதி. நகுலாம்பிகை மு |
| 154.யா/தெ/5594 | திருமதி. இலட்சுமி நாகலி |
| 155.யா/தெ/5598 | திருமதி. மதியாபரணம் சுப் |
| 156.யா/தெ/5610 | திரு. நன்னிக்குட்டி சுந்தர |
| 157.யா/தெ/5645 | திருமதி. தையல்நாயகி சீ |
| 158.யா/தெ/5648 | திரு. கதிரேசு சுப்பிரமணிய |
| 159.யா/தெ/5653 | திரு. வேலுப்பிள்ளை வல் |
| 160.யா/தெ/5660 | திருமதி. மரியப்பிள்ளை த |
| 161.யா/தெ/5676 | திரு. கணபதிப்பிள்ளை சி |
| 162.யா/தெ/5705 | திரு. கந்தப்பிள்ளை அப்ப |
| 163.யா/தெ/5747 | திருமதி. செல்வநாயகி சே |
| 164.யா/தெ/5749 | திருமதி. மாணிக்கப்பிள்ளை |
| 165.யா/தெ/5789 | திரு. கந்தர் சரவண்முத்து |
| 166.யா/தெ/5795 | திருமதி. அன்னம்மா முரு |
| 167.யா/தெ/5803 | திரு. தம்பையா யோகராசா |
| 168.யா/தெ/5808 | திருமதி. மரியம்மா சின்னப் |
| 169.யா/தெ/5883 | திருமதி. ஆச்சிப்பிள்ளை க |
| 170.யா/தெ/5912 | திரு. ஆறுமுகம் இளையத |
| 171.யா/தெ/5924 | திருமதி. கௌரி நாராயண |
| 172.யா/தெ/5954 | திரு. [illegible] கனக[illegible] |
| 173.யா/தெ/6032 | திருமதி. [illegible]ஸ்வதி முரு |
| 174.யா/தெ/6035 | திரு. அப்பாப்பிள்ளை கன |
| 175.யா/தெ/6045 | திரு. சின்னத்துரை இரத்தி |
| 176.யா/தெ/6111 | திரு. மூத்ததம்பி சவுந்தரநா |
| 177.யா/தெ/6134 | திரு. வைத்திலிங்கம் இளை |
| 178.யா/தெ/6191 | திரு. சின்னையா பொன்னம் |
| 179.யா/தெ/6209 | திருமதி. சரோஜினிதேவி பி |
| 180.யா/தெ/6240 | திரு. கந்தையா சின்னத்தம் |
| 181.யா/தெ/6294 | திரு. சங்கரப்பிள்ளை சிவசு |
| 182.யா/தெ/6315 | திருமதி. சரஸ்வதி சின்னத் |
| 183.யா/தெ/6317 | திரு. கந்தப்பிள்ளை சிதம்ப |
| 184.யா/தெ/6391 | திரு. வல்லிபுரம் இராசநாய |
| 185.யா/தெ/6445 | திருமதி. ஆச்சிக்குட்டி தியா |
| 186.யா/தெ/6447 | திருமதி. பாக்கியம் வேலுப் |

## இன்று ஒரு தகவல்

# மனநோயாளிகள்

ஒருத்தர் மிகவும் கவலையுடன் வந்தார். "ஏன இப்படி ஒரு மாதிரியாக வருகிறீர்கள்?" என்று கேட்டேன்."என்னைப் பார்த்து ஒருத்தன் பைத்தியம் என்று கூறிவிட்டான் சார். அவன் அப்படிக கூறியபின்பு நான் இப்படி ஆகிவிட்டேன் சார்" என்றார்."அதற்காக நீங்கள் பெருமைப்படுங்கள்" என்றேன். அவருக்கு ஒன்றும் புரியவில்லை. அவா என்னை ஒரு மாதிரியாகப் பார்க்க ஆரம்பித்து விட்டார். நான் ஓஷோ கூறியிருக்கின்ற சில கருத்துக்களை எடுத்துச் சொன்னேன்.

இந்த உலகில் பல பெரிய மேதாவிகள் எல்லாம் சாதாரண மக்களின் கண்ணுக்குப் பைத்தியமாகத்தான் தெரிந்திருக்கிறார்கள். ஏனெனறால் மற்றவர்கள் மாதிரி அவர்கள் கவலைப்படுவதில்லை. எதற்கும் இறுக்கம் அடைவதில்லை. சாவைக்கண்டு பயப்படுவதில்லை. அற்பமான மகிழ்வுக்கு ஆசைப்படுவதில்லை. அவர்கள் முழு மையாக வாழ்கின்றனர். மற்றோரை இது பாதிக்கின்றது.ஏனென்றால் இவர்களால் அவர் களைப் போல இருக்க முடிவதில்லை. அதனால் வெறுக்க ஆரம்பித்துவிடுகின்றனர்." அவன் கிடக்கிறான் பைத்தியக்காரன்" என்று கூறி அவர் களுக்குள் ஆறுதல் அடைய முயற்சிக்கின்ற னர்.

ஓர் உண்மை தெரியுமா? இந்த உலகத்தில் பைத்தியக்காரர்களும் புத்தி சுவாதீனமில்லாத வர்களும் தான் மகிழ்ச்சியாகவும் கொண்டாட் டமாகவும இருக்க முடியும். அதனால் நமக்கெல் லாம் புத்தி சுவாதீனத்துடன் கூடிய ஒரு பைத்தியக்காரத்தன்மை இருப்பது நல்லது தான். அப்படி இருந்தால் தான் வாழ்க்கையைக் கொண்டாட முடியும்.

ஒரு மனநல மருத்துவமனையில் ஒருவர் சிகிச்சைக்காக சேர்ந்திருந்தார். சேர்ந்து ஒரு வருடமாகியது.தான் குணமடைந்து விட்டோம் என்பது அவருக்குத் தெரிந்துவிட்டது. டாக்டரிடம் விபரத்தைக் கூறினார்.அவர் சொன்னார் "நீங்கள் சொல்வது சரியாகத் தான் இருக்கும். இருநதாலும் உங்களை இங்கேயே வைத்திருந்து சில சோதனைகளையெல்லாம் செய்து பார்த்துவிட்டு அதன் பின்பு வீட்டுக்கு அனுப்புகிறோம்" என்றார்.

அதேமாதிரி சோதனைகளையெல்லாம் செய்து பார்த்தார். இவர் சொல்வது உண்மை தான் என்று தெரிந்தது. வீட்டுக்கு அனுப்பிவைத்துவிட்டார். அதன் பின்பு இவர் தன்னுடைய அனுபவங்களைச் சொன்னார்."எப்படி இருந்தது மருத்துவமனை வாழ்க்கை?" என்று கேட்டார்கள் அவரது நண்பாகள் எல்லோரும். அப்போது இவர் சொன்னார் " நான் ஒரு வருடம் பைத்தியங்களுடன் பைத்திய மாக வாழ்ந்தேன். அதில் கொஞ்சம் கூடச் சிர மம தெரியவில்லை. ஆனால் நான் புத்தி தெளிந்த பின்னரும் ஒருவாரம் அவர்களுடன் இருந்தேன். அந்த ஒருவாரம் தான் எனக்கு ஒரு யுகமாகத் தெரிந்தது. அவ்வளவு கஷ்டமாக இருந்தது " என்றார்.

அதனால் ஒரு கூட்டத்திலிருந்து வேறுபட்டு வாழ்வதென்பது கொஞ்சம் சிரமம் தான். பைத்தியங்களுக்கு மத்தியில் புத்தி சுவாதீனமுள்ளவனாக இருப்பதற்கு மிக்க சாமர்த்தியம் தேவைபடுகிறது.

ஹிட்லர் ஒரு முறை பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குப் போயிருக்கிறார். இவர் பார்வையிடுவதற்காக மன நோயாளிகளை வரிசையாக நிறுத்தி வைத்திருந்தார்கள். அவர் வந்தவுடன் அங்கிருந்த எல்லோரும்"ஹிட்லர் வாழ்க " என்று கத்த வேண்டு மென அங்கே உள்ள டாக்டர் கூறியிருந்தார்.

ஹிட்லர் வந்தார்.சொல்லி வைத்திருந்தது போலவே எல்லோரும் கத்தினார்கள். ஒருவர் மட்டும் கத்தாமல் அமைதியாக நின்று கொண்டிருந்தார். ஹிட்லர் அவரிடம் போனார் "நீங்கள் மட்டும் ஏன் ஹிட்லர் வாழ்க என்று சொல்லாமல் நிற்கிறீர்கள்?" என்றார். அதற்கு அவர் மெதுவாக "நான் பைத்தியக்காரன் இல்லை" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# புலிகளின் கோரிக்கைகள் ஏற்கமுடியாதவை ஆனால் பிரச்சினைகளைப் பேசித் தீர்க்கலாம்

## ஐ.தே.கவின் தேசிய அமைப்பு செயலாளர் எஸ்.பி. திஸநாயக்க

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் கோரிக்கைகள், நிலைப்பாடுகள் என்பன முற்றுமுழுதாக நியாயமானவை என்று நாம் கூறவில்லை. ஆனால் பிரச்சினைக்குரியவற்றை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக்கொள்ள முடியும் என்பதே எமது கருத்தாகும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்புச் செயலாளர் எஸ்.பி. திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

அடுத்த வருட ஆரம்பத்தில் நாங்கள் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை கைப்பற்றிவிடுவோம் என்பதால் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தேர்தலை இலக்காக வைத்து கட்சியின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

எது எவ்வாறாயினும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை இலக்காக வைததே நாம் செயற்பட்டு வருகின்றோம். ஜனாதிபதித் தோதலில் அனுரா பண்டாரநாயக்க, மகிந்த ராஜபக்ஷ, ரட்னசிறி விக்கிரமநாயக்க என யார் வந்தாலும் நாம் எதிர்கொள்ளத் தயாராகவே இருக்கிறோம்.

நாடு இன்று பாரிய பொருளாதார மற்றும் சமாதான நெருக்கடிகளில் சிக்கி திக்குமுக்காடுகின்றது. இத்தகைய பொருளாதார நெருக்கடிகளுக்கு ஜனாதிபதியும் சமாதானப் பின்னடைவுகளுக்கு ஜே.வி.பியினருமே பொறுப்புக் கூறவேண்டும்.

ஜே.வி.பி தனது அரசியல் எதிர்காலத்தை திடப்படுத்தவே விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனையை எதிாக்கினறது. அன்று மாகாணசபை முறைமையை முழுமையாக நிராகரித்த ஜே.வி.பி. இன்று போட்டியிடவில்லையா? சமாதானச் செயற்பாடுகளின் இன்றைய தேக்க நிலைக்கு ஜே.வி. பியினரே காரணமாகும்.

தேர்தலுக்கு முன் மக்களுக்கு கவர்ச்சிகரமான வாக்குறுதிகளை அள்ளி வீசிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இன்று அவற்றை நிறைவேற்ற முடியாமல் தள்ளாடுகின்றது.

வாழ்க்கைச் செலவை கட்டுப்படுத்த முடியவில்லை. அரச ஊழியாகளின் சம்பளத்தை அதிகரிக்க முடியவில்லை. அதேவேளை சமாதானப் பேச்சுவாத்தைகளை முன்னெடுக்க முடியாமல் ஆளும் கூட்டமைப்பு அரசாங்கம் உள்ளது. எனவே அரசாங்கம் சந்தர்ப்ப சூழ்நிலையை சரியான முறையில் பயன்படுத்திக் கொண்டு சமாதானச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-121)

# இடைக்காலத் தீர்வை வழங்காத அரசு இறுதித் தீர்வை எப்படி வழங்கும்

## எம்.பி மகேஸ்வரன் சபையில் கேள்வி

(கொழும்பு)

இடைக்கால நிரவாகக் கட்டமைப்பை வழங்க முடியாத அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு இறுதித் தீர்வை எவ்வாறு பெற்றுக்கொடுக்கும் இவ்வாறு முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான தி.மகேஸ்வரன் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

அரசாங்க சேவை சம்பள முரண்பாடுகளை நீக்குவது தொடர்பான யோசனைகள் குறித்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில், விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை வழங்கி தமிழ்மக்களின் நம்பிக்கையை பெற்றுக்கொள்வதன் மூலமே இறுதித் தீர்வு பற்றிப் பேசமுடியும்.

இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப்புலிகளிடம் வழங்குவதன் ஊடாகத் தான் நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு நிரந்தரமான தீர்வைக் காணமுடியும். நாட்டின் பொருளாதாரம் தற்போது பாதாளம் நோக்கிச் சென்று கொணடிருக்கிறது. இதனால் அரசாங்கம் நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் விடுதலைப்புலிகள் கோருகின்ற இடைக்கால நர்வாகத்தை வழங்கி அதனூடாக பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணமுடியும்.

தம்மை இன்னொரு இனம் ஆளுவதை தமிழ்மக்கள் ஒருபோதும் விரும்பவில்லை. அதனைக் கடந்த தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்துகின்றன. நாட்டில் இரு தசாப்த காலமாக நிலவிவரும் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டுமாயின் நாட்டில் சமாதானச் சூழ்நிலை நிலவ வேண்டும் இதற்காக சாவதேச சமூகம் எடுத்துவரும் முன்னேற்றகரமான செயற்பாடுகளுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

விலைவாசி ஏற்றத்தை தாக்குப் பிடிக்கக் கூடியவாறு அரசாங்க ஊழியர்களுக்கு 100 வீத சம்பள உயர்வினை வழங்கவேண்டும். அதேநேரம் அரசாங்க ஊழியாகளுக்கு சம்பள உயர்வு வழங்குவது போல வடபகுதியில் நிவாரணத்தை நம்பி வாழும் 70வீதமான மக்களுக்கு தற்போது கொடுக்கப்படும் நிவாரணக் கொடுப்பனவினை இரண்டு மடங்காகக் கொடுக்க வேண்டுமெனவும் மகேஸ்வரன் மேலும கேட்டுக்கொண்டார். (த-121)

## இராசி பலன்

**11.09.2004**

**(ஆவணி 26, சனிக்கிழமை)**

**துவாதசி முன்னிரவு பி.ப 6.39 மணிவரை**

**பு'சம் பி.ப. 2.31 மணி வரை**

**இராகுகாலம் 9.03 - 10.33 மணி வரை**

**சுபநேரம் 3.03-4.33 மணிவரை**

**மேடம்**
புதிய விடயம், பயந்த சுபாவம், அந்நியர் நேசம், இனசனத் தொடர்பு.

**இடபம்**
உறவினர் சந்திப்பு, பிரயாண நன்மை, தொழில் வருமானம், காரிய சித்தி.

**மிதுனம்**
காரிய சிந்தை, பணவிரயம், எதிர்பாராத நன்மை, மாதர் நட்பு.

**கடகம்**
நல்ல முயற்சி, ஆழ்ந்த சிந்தை, சயன சுகம், குடும்ப சுகம்.

**சிங்கம்**
கோபப்படுதல், பிரயாண அலைச்சல், உஷ்ண வியாதி, வாக்குமேன்மை.

**கன்னி**
காரிய சித்தி, நல்ல வருமானம், தெய்வ சிந்தை, நல்ல செய்தி.

**துலாம்**
இஷ்ட சித்தி, பிரயாணம், பிறர் உதவி, சொத்துக்களால் நன்மை.

**விருச்சிகம்**
கட்டுப்பாடு, எதிர்பாராத நன்மை, ரோகநிலை, முயற்சி தாமதம்.

**தனுசு**
பிறருக்கு உதவுதல், கடன் தொல்லை, காரிய தாமதம், வாகனபயம்.

**மகரம்**
தெய்வ நம்பிக்கை, நல்ல முயற்சி, நண்பர்கள் சந்திப்பு, போசன சுகம்.

**கும்பம்**
மனமகிழ்ச்சி, காரிய நன்மை, சத்துருஜெயம், உடல் நலம்.

**மீனம்**
குடும்பக் கவலை, திடீர்நன்மை, தொழில் சிந்தை, காரிய தாமதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# தாயகம் திரும்பியோருக்கு பல்வேறு சிக்கல்கள்

(திருநெல்வேலி)

இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய யாழ்.மாவட்டத்தில் மீளக்குடியேறிய பொதுமக்கள் தமது தேசிய அடையாளஅட்டை மற்றும் பிறப்புச்சான்றிதழ் ஆகியவற்றைப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இடம்பெயர்ந்து இந்தியாவில் தஞ்சமடைந்து நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் நாடு திரும்பியுள்ள இவர்கள் தாம் இலங்கைப் பிரஜை என்பதனை உறுதிப்படுத்துவதில் பல சிக்கல்களை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-43)

# மட்டக்களப்பு மாவட்டத்தில் சோதனைக் கெடுபிடி அதிகரிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து படையினர் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு செல்லும் நுழைவாயில்களில் படையினரின் சோதனை நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதனால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவுபாலம், மண்முனைதுறை, செங்கலடி, கறுத்தப்பாலம், மாங்கேணி போன்ற இடங்களிலேயே இந்த சோதனைக் கெடுபிடிகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன.

உடற்சோதனை மற்றும் அடையாளஅட்டைப் பரிசோதனை போன்றவற்றால் பொதுமக்கள் உளவியல் ரீதியாகப் பாதிப்படைந்து வருவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. (ற)

# பாட்டுக்கொரு புலவன் பாரதி

**செப்ரெம்பர் 11 ஆம் திகதி மகாகவி பாரதியாரின் நினைவு தினம்**

பாட்டால் உணர்ச்சியூட்டிய மகாகவி பாரதியாரைப் பற்றி இன்றைய இளைய சமுதாயத்தினர் பலருக்குத் தெரியாமலிருப்பது வேதனைக் குரிய விடயம்.

பாரதி யார்? என்பதைப் பின்வருமாறு படம்பிடித்து விளக்குகிறார் பல்லாண்டு காலம் அவருடன் வாழ்ந்து தனது சொந்தப் பெயரையே பாரதிதாசன் என மாற்றிக் கொண்ட புரட்சிக்கவிஞர்.

"...................................................................

பைந்தமிழ்த் தேர்ப்பாகன், அவனொரு
செந்தமிழ்த் தேனீ! சிந்துக்குத் தந்தை
குவிக்கும் கவிதைக் குயில், இந் நாட்டினைக்
கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும் கவிமுரசு
நீடு துயில் நீக்கப் பாடி வந்த நிலா
காடு மணக்கும் கற்பூரச் சொற்கோ
கற்பனையூற்றாம் கவிதையின் புதையல்
திறம்பாட வந்த மறவன், புதிய
அறம்பாட வந்த அறிஞன்; நாட்டின்
படரும் சாதிப்படைக்கு மருந்து
மண்டும் மதங்கள் அண்டா நெருப்பவன்
அயலவர் எதிர்ப்புக்கு அணையா விளக்கவன்
..................................................................."

சுதந்திரக் கனல் சுடர்விட்டெரியும் உள்ளத்துடன் வாழ்ந்தவர் பாரதயார். பிறந்த நாட்டிலே வாழத் துரைத்தனம் தடைவிதித்ததால் புதுவையில் தங்கிப் புதுப்பாதை வகுத்தார். காசியிலே வேதம் பயின்றதன் காரணமாக அவர் மனம் சமரச நிலையை நாடிச் சென்றது.

சாதி, மதபேதமற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்க விரும்பினார். ஏழ்மை, பற்றாக்குறை, சனாதனதர்மவாதிகளின் கண்மூடித்தனமான எதிர்ப்பு முதலியவற்றின் மத்தியிலும் அவர் குரல் ஓங்கி ஒலித்தது. ஆண்டவன் படைப்பிலே அனைவரும் சமம் என்பதில் உறுதியாக இருந்த அவர் 'வேதியராயினும் ஒன்றே, வேறு குலத்தவராயினும் ஒன்றே' என்றார்.

பிறப்பிலே பிராமணராக இருந்தாலும் வாழ்க்கையில் ஒரு மனிதனாக வாழ்ந்துகாட்டினார். பார்ப்பனியத்தை அறவே வெறுத்த அவர் தமது குடுமியை வெட்டி எறிந்தார். பூணூலை அறுத்து வீசினார்.

பாரதியார் பிராமண குலத்திலே பிறந்த போதிலும் அவர்களது சனாதன தர்ம நடவடிக்கைகள், அவரது சொந்த வாழ்க்கையில் அவர்கள் செய்த குறுக்கீடுகள, அக்கிரமங்கள் முதலியவற்றால் பார்பனியத்தை வேம்பென வெறுத்தார்.

'பார்பபானை ஐயனென்ற காலமும் போச்சே' என்றதோடு நின்றுவிடாமல்
"சாத்திரங்கள் வேண்டா, சதுர்மறைகள் ஏதுமில்லை
தோத்திரங்கள் இல்லை உளம தொட்டு நிற்றல் போதுமடா"
என்ற அவர்,
"பார்ப்பனக் குலம் கெட்டழிவெய்திய
பாழடைந்த கலியுக மாதலால்
வேர்ப்ப வேர்ப்பப் பொருள் செய்வ தொன்றையே
மேன்மை கொண்ட தொழிலெனக் கொண்டனர்"
என்றார்.

காக்கை, குருவியைக் கூட தன் இனம் எனப் பெருமையுடன் கூறிய பாரதியார் அன்றைய இந்தியாவிலே அறியாமை, மூடநம்பிக்கை, தீண்டாமை முதலியவற்றைக் கண்டு வெகுண்டெழுந்தார்.

"சாதிகள் இல்லையடி பாப்பா- குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்"
என இளஞ் சிறார்களுக்கு அறிவுறுத்தினார். சுதந்திரப் போராட்டத்தில கலந்துகொள்ள வருமாறு உறுதிகொண்ட நெஞ்சினரை, இளைய பாரதத்தினரை அறைகூவி அழைத்தார்.

ஈ.வே.ரா. பெரியாரது சுயமரியாதைக் கொள்கைகள், பகுத்தறிவுக் கருத்துக்கள் பேசப்படாத 1930 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியி லேயே மூடநம்பிக்கைகளை வெகுவாகச் சாடினார்.

செத்த பின்பு சிவலோகம் வைகுண்டம் சேர்ந்திடலாமென எண்ணி யிருக்கும் பித்த மனிதர்களை எள்ளிநகையாடினார். சிவலோகமும் வைகுண்டமும் உங்கள் முன இருக்கும பொழுது அதை உணராமல் செத்த பின்பு அதனை அடையலாமென இருக்கும் பித்த மதியாளர்கள் என அவர்களை விழித்தார்.

மட்டற்ற உணர்ச்சிதனை எடுத்துக்காட்டும் விழிகளிலே ஒளி பெருக் கும் வீரப்பார்வை கொண்ட பாரதியார் தம் வாழ்நாள் முழுவதும் யாருக்கும அஞ்சாத வீரராகவே வாழ்ந்தார். எதற்கும், எவர்க்கும் அஞ்சாமல் நெஞ் சிலுற்றதைச் செய்கையில் காட்டினார். இதனால் பழம் பண்டிதர்கள், சனாதனவாதிகள், பக்தர்கள் போல் நடிக்கும் பகல் வேடக்காரர்கள் போன்றோரது எதிர்ப்புக்குள்ளானார். வேட்டை நாயைப் போலப் பாரதி யாரைத் தேடியலைந்த ஆங்கிலேய ஏகாதிபத்தியம் ஒரு புறம், பழமைவாதி களின் எதிர்ப்பு ஒருபுறம் அவரை நெருக்கியபோதிலும் அவர் அஞ்சி விடவிலலை. இந்தச் சந்தர்ப்பத்திலேதான் 'நெஞ்சு பொறுக்குதில்லையே - இந்த நிலைகெட்ட மனிதரை நினைந்து விட்டால்' என்ற பாடல் பிறந்தது.

'பெறறதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவவானிலும் நனி சிறந்தனவே' என வாழ்ந்த பாரதியாரை அன்றைய சமுதாயம் அடையாளம் காணத்தவறி விட்டது. பார்புகழும் பாவேந்தரான அவரது இறுதி மரியாதையின் போது கலந்து கொண்டவர்கள் ஏழுபேர்களே என்பது தமிழ் கூறும் நல்லுல கத்துக்குத் தலை குனிவு. உயிருடன் வாழுங் காலத்திலேயே போற்றத் தகுந்த பெரியார்களுக்கு ஏற்ற மரியாதை கொடுக்க தமிழ் நாடும் தமிழ் மக்களும் என்றுமே முன்வருவதில்லை என்பது கசப்பான உண்மை.

"கல்லை வயிர மணியாக்கல் - செம்பைக்
கட்டித் தங்கமெனச் செய்தல்- வெறும்
புல்லை நெல்லெனப்புரிதல் - பன்றிப்
போத்தைச் சிங்க ஏறாக்கல் - மண்ணை
வெலலத் தினிப்புவரச் செய்தல்- என
விந்தை தோன்றிட இந் நாட்டை..."
மாற்றியமைத்திட வேண்டுமெனப் பாரதியார் கனவு கண்டார்.

அன்று அவர் கண்ட கனவுகள் இன்று மெல்ல மெல்ல நனவாக மாறிக் கொண்டு வருவதைக் காணும் போது, கனவு கண்ட கவிஞன் உயிருடனில்லையே என்பது மிகமிக வருத்தம் தரும் செய்தியாகும். எனினும், பாரதி மறைந்தாலும் அவரது பாடல்கள் உயிருடன் இருக்கின்றன என்பது சிறிது ஆறுதல்.

**பொன்.இராசதுரை**

## 7 கடைகள் கையளிப்பு

(சங்கானை)

சங்கானை பொதுச்சந்தையில் உள்ள 7 கடைகளில் முகாமிட் டிருந்த படையினர் அங்கிருந்து வெளியேறி அவற்றை பொது மக்க ளின் பாவனைக்காக கையளித் துள்ளனர்.

கடந்த வருடங்களாக தம் வசம் வைத்திருந்த மேற்படி 7 கடை களையும் படையினர் உத்தியோக பூர்வமாக சுழிபுரம் பிரதேச செய லாளரிடம் கையளித்துள்ளனர். (ப-20)

## கட்டுடையில் கசிப்பு உற்பத்தி

(சங்கானை)

மானிப்பாய் கட்டுடைப் பிரதே சத்தில் கசிப்பு உற்பத்தி அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்துக் கருத்துத் தெரி வித்த வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் தலைவர் சி.இரா சலிங்கம்,

கட்டுடைப் பிரதேசத்தில் இடம் பெற்று வரும் கசிப்பு உற்பத்தியைத தடுப்பதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (ப-20)

## புத்தளம் பிரதேச செயலர் காத்மண்டு பயணம்

(புத்தளம்)

புத்தளம் பிரதேச செயலாளர் ஏ.சீ.எம்.நமீல், நேபாளத்தின் தலை நகரான காத்மாண்டுவில் நடை பெறும் மனித உரிமை மீறல்கள் சம்பந்தமான செயலமர்வில் கலந்து கொள்வதற்காக கடந்த ஞாயிற் றுக்கிழமை இலங்கையிலிருந்து பயணமாகியுள்ளார்.

20 தினங்கள் அங்கு தங்கியி ருக்கும் அவர், அரசசார்பற்ற நிறு வனஙகளின் பிரதிநிதிகள் பல ரையும் சந்திப்பதுடன், தாய்லாந் துக்கும் விஜயம் செய்வார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(ற-15)




உலக எழுத்தறிவு தினத்தையொட்டி புதுடில்லியில் நடை பெற்ற விழாவை குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் குத்துவிளக்கேற்றித் தொடக்கிவைத்தார்.

# ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தைக் கூட்ட இடதுசாரிகள் கோரிக்கை

அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளைப் பற்றி விவாதிப்பதற்காக இம்மாத இறுதியில் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தை கூட்டுமாறு ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசை இடது சாரிக்கட்சிகள் கோரியுள்ளன.

டில்லியில் நேற்று முன்தினம் மார்க்ஸிஸட், இந்திய கம்யூனிஸ்ட், போர்வேட் புளக், ஆர்.எஸ்.பி. ஆகிய இடதுசாரிக்கட்சிகளின் ஆலோசனைக கூட்டம நடைபெற்றது. ஒருங்கிணைப் புக் குழுக்கூட்டத்தில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசிடம் தெரிவிக்க வேண்டிய பிரச்சினை கள் குறித்து விவாதிக்கப்பட்டன.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ஏ.வி.பரதன் இம் மாதம் 30 ஆம் திக திக்குள் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தைக் கூட்டவேண்டுமென்று அரசை வலியுறுத்தவுள்ளதாகக் குறிப்பிட்டார்.

தேசிய வேலைவாய்ப்பு உறு திச்சட்டம் எப்பொழுது கொண்டு வரப்படுமென்பதை அரசு தெரிவிக்க வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார். விவசாயத் தொழிலா ளர்களுக்கான சட்டம், குடிநர்வசதி, வெளிநாட்டு வர்த்தகக கொள்கை உட்படக் குறைந்தபட்ச செயல் திட்டததில் உள்ள முக்கிய அம்சங் களை நிறைவேற்றுவது குறித்து ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத் தில் விவாதிக்க இடதுசாரிக்கட்சி கள் முடிவு செய்திருப்பதாகவும் பரதன் தெரிவித்தார். (து)

## விண்வெளி கண்காணிப்புத் திட்டம்

விமானத்திலிருந்து ராடர் மூலம் கண்காணிக்கும் 'அவாவ்' என்ற விண்வெளிக் கண்காணிப்புத் திட் டத்தை 1800 கோடி ரூபா செலவில் 7 ஆண்டுகளுக்குள் உள்நாட்டி லேயே நிர்மாணிப்பதற்கான திட் டத்துக்கு பாதுகாப்புக்கான மத் திய அமைச்சரவைக் குழு ஒப்பு தல் வழங்கியுள்ளது.

நேற்று முன்தினம் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் இதற் கான ஒப்புதல் வழங்கப்பட்டதாக இக் கூட்டத்துக்குப் பின்னர் செய்தியாளர் களிடம பேசிய பாதுகாப்பு அமைசசர் பிரணாப் முகர்ஜி தெரிவித்தார். (து)

# ஜெயாவின் சொத்துக்குவிப்பு ஆவணங்கள் கர்னாடகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன

தமிழக முதலமைச்சர் ஜெய லலிதாவுக்கு எதிரான சொத்துக் குவிப்பு வழக்கு ஆவணங்களை கர்னாடக நீதிபதிகள் குழு நேற்று முன்தினம் இரவு பெங்களூருக்கு எடுத்துச் சென்றது.

ஆவணங்களை எடுத்துச் செல்ல கர்னாடகத்திலிருந்து வந்த மோட்டார் வாகனத்துக்குப் பாதுகாப்பாக தமிழ்நாடு ஆயுதப் படைப் பொலிஸாரும் கர்னாடகப் பொலிஸாரும் உடன் சென்றனர்.

உச்சநீதிமன்ற உத்தரவுப்படி கடந்த மாதம் 27 ஆம் திகதி சென்னை வந்த கர்னாடக நீதிபதிகள் குழு ஜெயலலிதாவுக்கு எதிரான சொத் துக் குவிப்பு வழக்கில் 2451 பக்க ஆவணங்களையும் 1600 சாட்சிப் பொருட்களையும்கடந்த 13 நாட்களாகச சரிபார்த்துச் சோதனை செய்தனர்.

சரிபார்க்கும் பணிகள் நேற்றுமுன் தினமமுடிவடைந்ததும்ஆவணஙகளும சாட்சிப பொருட்களும் 17 அட்டைப் பெட்டிகளில வைத்துச் சீலிடப்பட்டன.

ஒருவார காலத்துக்குள் சொத் துக் குவிப்பு ஆவணங்களை பெங் களூருக்குக் கொண்டு செல்லவேண்டு மென்று கடந்த மாதம் 23 ஆம் திகதி உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு 13 நாட்களுக்குப் பின்னர் நேற்று முன் தினம் இரவு நிறைவேற்றப்பட்டது.(து)


## தொடரும் முகமூடிக் கொள்ளையர் கைவரிசை

சென்னைப் புற நகர்ப் பகுதி யான தாம்பரம் அருகே நேற்று முன்தினம் அதிகாலை முகமூடிக் கொள்ளையர்கள் ஊராட்சி அதி காரியான வாசுதேவன் என்பவரது வீட்டுக்குள் புகுந்து 100 சவரன் தங்க நகைகளையும் 50 ஆயிரம் ரூபா பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

அதிகாலை நேரத்தில் வீட்டினுள் புகுந்த கொள்ளையர்கள் தூங்கிக் கொண்டிருந்த வாசுதேவன் குடும் பத்தினரை அரிவாள் காட்டி மிரட்டி இக்கொள்ளையை நடத்தியுள்ளனர்.(து)



மும்பையில் தேசிய பார்வையற்ற சிறுவர்களின் பள்ளியில், பார்வையிழந்த மாணவர்கள் இணைந்து அமைத்த பிரமிட்டில் ஏறி உறியை அடிக்கும் மாணவன்.



கர்னாடக மாநிலம் உடும்பியில் உள்ள ஸ்ரீகிருஷ்ணர் கோவிலில் உள்ள தங்கத் தேர், கிருஷ்ணரை உலாக் கொண்டு செல்ல அலங்கரிக்கப்பட்டு தயார் நிலையில் இருக்கும் காட்சி.

# ர் மீளப்பெறுவோர் –2004

ரு. பொன்னையா நடராசா
ருமதி. பகவதி இரத்தினம்
ருமதி. பரிமளம் பிள்ளையினார்
ரு. [illegible]முகம் தரு[illegible]சா
ரு. [illegible]த்திகேசு ப[illegible]சலி
ரு. கந்தையா விஜயரத்தினம்
சல்வி. கோசலாதேவி மாணிக்கம்
ரு. சின்னப்பு குணரத்தினம்
ரு. கணபதி கிருஷ்ணர்
ரு. கந்தப்பிள்ளை சிவலிங்கம்
சல்வி. அமுதினி சின்னத்தம்பி
ரு. பொன்னுத்துரை பத்மநாதன்
ரு. முருகேசு இராசசிங்கம்
ருமதி. அம்மாப்பிள்ளை வல்லிபுரம்
ருமதி. புனிதவதி கந்தையா
ருமதி. சத்திஸ்வரி சிவலிங்கம்
ரு. முத்தையா சிவசுதன்
ருமதி. இரத்தினம் இராசையா
ருமதி. கமலாம்பிகை செல்வரத்தினம்
ருமதி. இராசம்மா சுந்தரமூர்த்தி
ரு. கந்தையா நடராசா
சல்வி. ரஞ்சிதமலர் சீனி
ரு. செந்தில்நாதன் ஐயர் இரவிச்சந்திரன்
ருமதி. நாகேஸ்வரிஅம்மா தம்பிமுத்து
சல்வி. சிவதேவி சிங்கநாயகம்
ருமதி. [illegible]பேரின்பநாய[illegible] கதிரமலை
ரு. அகுஸ்தீன் செபமாலை
ரு. வைியரமுத்து பாலசிங்கம்
ருமதி. வரோனிக்கா மாட்டீன்
ரு. நாகர் கிருஷ்ணர்
ருமதி. பொன்மணி கந்தையா
ரு. அருணாசலம் விஸ்வநாதன்
ரு. கந்தவனம் கதிர்காமசிங்கம்
ருமதி. நாகம்மா கந்தையா
ரு. பொன்னு சிவசுப்பிரமணியம்
ரு. தாமோதரம்பிள்ளை மோகனசுந்தரம்
ருமதி. மனோன்மணி அழகரட்ணம்
ரு. தம்பிமுத்து குகதாஸ்
ரு. முருகேசு நாகரத்தினம்
ரு. இராசா சிவராசா
ரு. முருகேசு சபாபதி
ரு. சடையர் சீனியர்
ரு. வயிரவி நன்னித்தம்பி
ரு. இராசையா பொன்னுத்துரை
ரு. அம்பலப்பிள்ளை செல்லத்துரை
ரு. நல்லதம்பி துரைராசா
ருமதி. ஞானாம்பிகை நாகலிங்கம்
ரு. கதிர்காமு இராசையா
ரு. சின்னத்தம்பி நாகரத்திணம்
ருமதி. சின்னத்தங்கச்சி சின்னத்துரை
ரு. முருகேசு இராமலிங்கம்
ரு. செல்லப்பா சின்னத்துரை
ருமதி. தனேஸ்வரி கணபதிப்பிள்ளை
ரு. சந்தியா செபஸ்தி
ரு. மகாரத்தினம் கருணாகரன்
ரு. சின்னத்தம்பி கதிரவேலு
மதி. கெங்கையம்மா சண்முகம்
மதி. செல்வமலர் தர்மபாலன்
. வேலுப்பிள்ளை தம்பையா
. வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்
மதி. மகேஸ்வரி கந்தையா
. சின்னத்துரை செல்வநாயகம்
. கார்த்திகேசு [illegible]தையா
மதி. [illegible] வன்னியசிங்கம்
. மாணிக்கம் சின்னத்துரை
மதி. நகுலாம்பிகை முத்துலிங்கம்
மதி. இலட்சுமி நாகலிங்கம்
மதி. மதியாபரணம் சுப்பிரமணியம்
நன்னிக்குட்டி சுந்தரமூர்த்தி
மதி. தையல்நாயகி சீவரெட்ணம்
கதிரேசு சுப்பிரமணியம்
வேலுப்பிள்ளை வல்லிபுரம்
மதி. மரியப்பிள்ளை தம்பியப்பு
கணபதிப்பிள்ளை சின்னப்பு
கந்தப்பிள்ளை அப்பாப்பிள்ளை
மதி. செல்வநாயகி சோமசுந்தரம்
மதி. மாணிக்கப்பிள்ளை கந்தரத்தினம்
கந்தர் சரவண்முத்து கந்தவனம்
மதி. அன்னம்மா முருகையா
தம்பையா யோகராசா
மதி. மரியம்மா சின்னப்பு
மதி. ஆச்சிப்பிள்ளை கனகசிங்கம்
ஆறுமுகம் இளையதம்பி
மதி. கௌரி நாராயணசாமி
கந்[illegible]யா கனக[illegible]ரம்
மதி. [illegible]ஸ்வதி முருகையா
அப்பாப்பிள்ளை கனபதிப்பிள்ளை
சின்னத்துரை இரத்தினம்
மூத்ததம்பி சவுந்தரநாயகம்
வைத்தி[illegible] இளையதம்பி
சின்னையா[illegible]பான்னம்பலம்
மதி. சரோஜினிதேவி பிள்ளையாகுட்டி
கந்தையா சின்னத்தம்பி
சங்கரப்பிள்ளை சிவசுப்பிரமணியம்
மதி. சரஸ்வதி சின்னத்தம்பர்
கந்தப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை
வல்லிபுரம் இராசநாயகம்
மதி. ஆச்சிக்குட்டி தியாகராசா
மதி. பாக்கியம் வேலுப்பிள்ளை

## உடுவில் உதவி அரச அதிபர் பிரிவு

| | |
|---|---|
| 1.யா/உ/62 | திருமதி. பாரததேவி அம்பலவாணர் |
| 2.யா/உ/104 | திரு. தம்பு சரவணமுத்து |
| 3.யா/உ/137 | திரு. சின்னத்தம்பி ஆறுமுகசாமி |
| 4.யா/உ/151 | திரு. ஆறுமுகம் பொன்னையா |
| 5.யா/உ/221 | திரு. வேலுப்பிள்ளை நாகலிங்கம் |
| 6.யா/உ/249 | திரு. இராமலிங்கம் சர்வானந்தன் |
| 7.யா/உ/268 | திரு. இளையதம்பி செல்லத்துரை |
| 8.யா/உ/269 | திரு. சூசைப்பிள்ளை அன்ரனிதாஸ் |
| 9.யா/உ/289 | திரு. கணவதிபிள்ளை மாணிக்கம் |
| 10.யா/உ/345 | திரு. சரவணைமுத்து சுப்பிரமணியம் |
| 11.யா/உ/351 | திரு. தம்பையா வல்லிபுரம் |
| 12.யா/உ/354 | திரு. செல்லப்பாஅல்பேட் பாலசிங்கம் |
| 13.யா/உ/407 | திரு. கந்தன் சின்னத்தம்பி |
| 14.யா/உ/469 | திருமதி. ஆச்சிப்பிள்ளை வேலுப்பிள்ளை |
| 15.யா/உ/477 | திரு. சிதம்பரநாதர் பொன்னம்பலம் |
| 16.யா/உ/495 | திரு. செல்லத்துரை சண்முகானந்தன் |
| 17.யா/உ/554 | திரு. கணபதிப்பிள்ளை கந்தையா |
| 18.யா/உ/562 | திரு. கணபதிப்பிள்ளை நாகமணி |
| 19.யா/உ/563 | திரு. சின்னத்தம்பி நவரத்தினம் |
| 20.யா/உ/581 | திரு. கந்தையா சிவஞானம் |
| 21.யா/உ/606 | திரு. குமாரு ஆறுமுகம் |
| 22.யா/உ/626 | திரு. செல்லப்பா கனகலிங்கம் |
| 23.யா/உ/643 | திரு. சபாபதிப்பிள்ளை கதிர்காமத்தம்பி |
| 24.யா/உ/648 | திரு. பெரியதம்பி கந்தையா |
| 25.யா/உ/691 | திரு. மார்க்கண்டு நவரத்தினம் |
| 26.யா/உ/698 | திரு. கணேசு பாக்கியநாதன் |
| 27.யா/உ/714 | திருமதி. இரத்தினம்மா கணபதிப்பிள்ளை |
| 28.யா/உ/721 | திரு. வல்லிபுரம் இராசதுரை |
| 29.யா/உ/738 | திரு. வேலாயுதர் சின்னத்தம்பி |
| 30.யா/உ/786 | திரு. வல்லிபுரம் சுப்பையா |
| 31.யா/உ/874 | திரு. நன்னித்தம்பி கந்தையா |
| 32.யா/உ/928 | திருமதி. இரதிமதி செல்வரத்தினம் |
| 33.யா/உ/976 | திரு. நல்லதம்பி தாமோதரம்பிள்ளை |
| 34.யா/உ/1007 | திருமதி. லோகேஸ்வரி கதிரமலை |
| 35.யா/உ/1041 | திரு. செல்லையா றிச்சேட் இராசதுரை |
| 36.யா/உ/1118 | திரு. செல்லையா ஆனந்தகுமாரதாஸ் |
| 37.யா/உ/1176 | திரு. நன்னியர் வேலுப்பிள்ளை |
| 38.யா/உ/1193 | திரு. மூத்ததம்பி கந்தசாமி |
| 39.யா/உ/1239 | திருமதி. டெய்சி அருளம்மா துரைரத்தினம் |
| 40.யா/உ/1263 | திரு. ஐயாத்துரை பஞ்சலிங்கம் |
| 41.யா/உ/1342 | திரு. சுப்பிரமணியம் சிவரத்தினம் |
| 42.யா/உ/1347 | திரு. கனகசபை செல்லத்துரை |
| 43.யா/உ/1374 | திருமதி. அன்னமேரி ஸ்ரோணர் தம்பிமுத்து |
| 44.யா/உ/1389 | திரு. நாகலிங்கம் கந்தையா |
| 45.யா/உ/1463 | திரு. செல்லப்பா இரத்தினம் |
| 46.யா/உ/1524 | செல்வி. சுபத்திராதேவி நடராசா |
| 47.யா/உ/1550 | திரு. கதிர்காமர் வயிரமுத்து |
| 48.யா/உ/1563 | திரு. மாணிக்கத்தியாகராசா ஆனந்தர் |
| 49.யா/உ/1567 | திரு. கந்தையா பாலசுப்பிரமணியம் |
| 50.யா/உ/1576 | திரு. கார்த்திகேசு ஐயாத்துரை |
| 51.யா/உ/1586 | திரு. மயில்வாகனம் கந்தசாமி |
| 52.யா/உ/1624 | திரு. கந்தர் பொன்னுத்துரை |
| 53.யா/உ/1666 | திரு. அருணாசலம் சதானந்தம் |
| 54.யா/உ/1700 | திருமதி. அகிலேஸ்வரி செல்லத்துரை |
| 55.யா/உ/1713 | திரு. பூதப்பிள்ளை இளையதம்பி மகேஸ்வரன் |
| 56.யா/உ/1721 | திரு. முருகுப்பிள்ளை கணேசபிள்ளை |
| 57.யா/உ/1722 | திரு. துரையப்பா குமாரசாமி |
| 58.யா/உ/1765 | திரு. குமாரு இரத்தினம் |
| 59.யா/உ/1767 | திருமதி. இராசமுத்து தில்லையம்பலம் |
| 60.யா/உ/1772 | திரு. கந்தையா சோமசுந்தரம் |
| 61.யா/உ/1798 | திருமதி. சின்னம்மா ஆறுமுகம் |
| 62.யா/உ/1815 | திரு. வெள்ளையர் தம்பு |
| 63.யா/உ/1869 | திரு. இளையதம்பி குமாரசுவாமி |
| 64.யா/உ/1901 | திரு. சின்னத்தம்பி மாரிமுத்து |
| 65.யா/உ/1921 | திரு. செல்லத்துரை நவரத்தினம் |
| 66.யா/உ/1966 | திருமதி. இராசாம்பாள் குழந்தைவேலு |
| 67.யா/உ/2082 | திரு. அழகக்கோன் பாலசிங்கம் வல்லிபுரம் |
| 68.யா/உ/2092 | திரு. சுப்பையா ஏகாம்பரம் |
| 69.யா/உ/2237 | திரு. இளையதம்பி வைத்திலிங்கம் |
| 70.யா/உ/2255 | திரு. முருகேசு ஞானப்பிரகாசம் |
| 71.யா/உ/2257 | திரு. முருகேசு கந்தப்பசேகரம் |
| 72.யா/உ/2258 | திரு. மாரிமுத்து கார்த்திகேசு |
| 73.யா/உ/2431 | திரு. நாகமணி இரத்தினம் |
| 74.யா/உ/2446 | திரு. நல்லதம்பி சீனித்தம்பி |
| 75.யா/உ/2551 | திரு. ஆறுமுகம் இராசா |
| 76.யா/உ/2563 | திரு. சொக்கலிங்கம் தியாகராசா |
| 77.யா/உ/2582 | திருமதி. சிவபாக்கியம் சின்னத்துரை |
| 78.யா/உ/2583 | திரு. வல்லிபுரம் சுப்பையா |
| 79.யா/உ/2587 | திரு. சண்முகம் கணேசு |
| 80.யா/உ/2608 | திருமதி. கயிலேஸ்வரி வேலாயுதபிள்ளை |
| 81.யா/உ/2614 | செல்வி. கமலாதேவி காசிநாதன் |
| 82.யா/உ/2643 | திரு. மாரிமுத்து கணபதிப்பிள்ளை |
| 83.யா/உ/2712 | திரு. கதிர்காமு இராசதுரை |
| 84.யா/உ/2732 | திரு. தம்பிப்பிள்ளை தம்பிஜயா |
| 85.யா/உ/2768 | திரு. கந்தையா நவரட்ணம் |
| 86.யா/உ/2808 | திரு. தம்பிஜயா இராமநாதன் |
| 87.யா/உ/2811 | செல்வி. ஜெகதாம்பிகை நல்லையா |
| 88.யா/உ/2861 | திரு. செல்லப்பா எட்வேட் ராஜசிங்கம் |
| 89.யா/உ/2888 | திரு. கந்தையா இயேசுரத்தினம் |
| 90.யா/உ/2899 | திரு. கந்தையா அமரக்கோன் |
| 91.யா/உ/3009 | திரு. கணபதி சீனி |
| 92.யா/உ/3034 | திருமதி. அழகம்மா பொன்னம்பலம் |
| 93.யா/உ/3047 | திரு. கந்தையா சண்முகநாதன் |
| 94.யா/உ/3059 | திரு. யோன்சின்னட்டியர் சாமுவேல் |
| 95.யா/உ/3070 | திரு. சுப்பையா சின்னத்துரை |
| 96.யா/உ/3072 | திரு. சிதம்பரப்பிள்ளை தம்பு கந்தையா |
| 97.யா/உ/3073 | திரு. இளையதம்பி கந்தையா |
| 98.யா/உ/3077 | திருமதி. பேபி கணேசலிங்கம் |
| 99.யா/உ/3157 | திரு. சுப்பையா இராசா |
| 100.யா/உ/3158 | திரு. இளையதம்பி வல்லிபுரம் |
| 101.யா/உ/3183 | திரு. தம்பு பேரம்பலம் |
| 102.யா/உ/3195 | திருமதி. இராசமணி இராசலிங்கம் |
| 103.யா/உ/3219 | திரு. சரவ்ணை மகாலிங்கம் |
| 104.யா/உ/3224 | திரு. அரியகுட்டி சண்முகநாதன் |
| 105.யா/உ/3238 | திரு. நடராசா சத்தியசீலன் |
| 106.யா/உ/3245 | திரு. கந்தையா சண்முகம் |
| 107.யா/உ/3314 | திருமதி. இராசகுணமணி இராசதுரை |
| 108.யா/உ/3411 | திரு. பொன்னம்பலம் சுப்பிரமணியம் |
| 109.யா/உ/3414 | திரு. வயித்திலிங்கம் சதாசிவம் |
| 110.யா/உ/3466 | திருமதி. வசந்தராணி ஞானப்பிரகாசம் |
| 111.யா/உ/3519 | திரு. கனகசபை சுப்பிரமணியம் |
| 112.யா/உ/3521 | திரு. தம்பு சின்னத்துரை |
| 113.யா/உ/3545 | திரு. கணபதிப்பிள்ளை ஸ்ரீதரன் |
| 114.யா/உ/3599 | திரு. பொன்னையா ஐயாத்துரை |
| 115.யா/உ/3600 | திருமதி. செல்வராணி குமாரவேலு |
| 116.யா/உ/3633 | திரு. சங்கரப்பிள்ளை இராமநாதன் |
| 117.யா/உ/3689 | திரு. கதிரேசு சாந்தகுமார் |
| 118.யா/உ/3733 | திரு. செல்வமாணிக்கம் குலேந்திரம் |
| 119.யா/உ/3785 | திரு. துரையப்பா பாலசுப்பிரமணியம் |
| 120.யா/உ/3805 | திரு. வயித்திலிங்கம் சங்கரப்பிள்ளை |
| 121.யா/உ/3923 | திரு. கிருஷ்ணபிள்ளை கணேசலிங்கம் |
| 122.யா/உ/4005 | திரு. மரியாம்பிள்ளை தாவீதுராஜா |
| 123.யா/உ/4058 | திரு. சின்னத்தம்பி தங்கராசா |
| 124.யா/உ/4073 | திரு. முருகுப்பிள்ளை கனகசபை |
| 125.யா/உ/4100 | திரு. சுப்பிரமணியம் குமாரசிங்கம் |
| 126.யா/உ/4222 | திரு. நாகமுத்து தம்பிராசா |
| 127.யா/உ/4224 | திரு. சின்னத்துரை திருவைகுந்தநாதன் |
| 128.யா/உ/4244 | திரு. சீரங்கம் பாலசிங்கம் |
| 129.யா/உ/4247 | திரு. குழந்தையன் சங்கரப்பிள்ளை |
| 130.யா/உ/4251 | திருமதி. புனிதவதி கணேசமூர்த்தி |
| 131.யா/உ/4327 | திரு. வேலுப்பிள்ளை கந்தையா |
| 132.யா/உ/4329 | திரு. சரவணமுத்து கனகசுந்தரம் |
| 133.யா/உ/4472 | திருமதி. செல்லம்மா தம்பிஜயா |
| 134.யா/உ/4550 | திரு. வைரவப்பிள்ளை சிவகுமாரன் |
| 135.யா/உ/4583 | திரு. கந்தையா செல்லத்துரை |
| 136.யா/உ/4586 | திருமதி. தவமலர் தணிகாசலம் |
| 137.யா/உ/4614 | திரு. செல்லத்துரை இரத்தினசபாபதி |
| 138.யா/உ/4615 | திரு. நாகேந்திரம் சந்திரகாந்தன் |
| 139.யா/உ/4628 | திருமதி. சத்தியபாமா சிவகுமார் |
| 140.யா/உ/4724 | திரு. சீனிக்குட்டி பரமானந்தம் |
| 141.யா/உ/4734 | திருமதி. இராசமலர் நவரட்ணம் |
| 142.யா/உ/4809 | திரு. நாராயணன் செல்லத்துரை |
| 143.யா/உ/4824 | திருமதி. அருட்சோதி சீவரத்தினம் |
| 144.யா/உ/4847 | திருமதி. மனோன்மணி ஞானமுத்து |
| 145.யா/உ/4903 | திரு. கனகசபை கார்த்திகேசு |
| 146.யா/உ/4904 | திரு. வயித்திலிங்கம் இந்திரன் |
| 147.யா/உ/4911 | திரு. சடையன் அப்புத்துரை |
| 148.யா/உ/4970 | திரு. இரத்தினம் குமாரதாசன் |
| 149.யா/உ/5015 | திரு. சின்னையா மயில்வாகனம் |
| 150.யா/உ/5095 | திரு. வீரசிங்கம் ரவீந்திரன் |
| 151.யா/உ/5111 | திரு. கந்தையா சோமநாதன் |
| 152.யா/உ/5121 | திரு. முத்துத்தம்பி இராசரத்தினம் |
| 153.யா/உ/5123 | திரு. சபாபதி ஆனந்தர் |
| 154.யா/உ/5144 | திருமதி. பதஞ்சலி சிவபாக்கியம் |
| 155.யா/உ/5146 | திரு. வினாசித்தம்பி ஐயாத்துரை |
| 156.யா/உ/5176 | திரு. சிதம்பரப்பிள்ளை கந்தையா |
| 157.யா/உ/5217 | திருமதி. சின்னத்துரை கனகம்மா |
| 158.யா/உ/5218 | திரு. சிவக்கொழுந்து இராசநாயகம் |
| 159.யா/உ/5254 | திருமதி. சிவபாக்கியம் பாலு |
| 160.யா/உ/5278 | திருமதி. அமிர்தம்மா நவரத்தினம் |
| 161.யா/உ/5313 | திரு. சின்னப்பு கந்தையா |
| 162.யா/உ/5317 | திருமதி. பொன்னம்மா இரத்தினம் |
| 163.யா/உ/5355 | திரு. இளையதம்பி தயாளன் |
| 164.யா/உ/5386 | திரு. எள்ளுப்போலை அப்புத்துரை |
| 165.யா/உ/5401 | திருமதி. சின்னம்மா சின்னத்துரை |
| 166.யா/உ/5416 | திரு. சீனி சபாபதி |
| 167.யா/உ/5459 | திருமதி. வில்வரத்தினம் தம்பிப்பிள்ளை |
| 168.யா/உ/5554 | திரு. சேகரம்பிள்ளை தில்லைநாதன் |
| 169.யா/உ/5597 | திரு. முருகேசுகந்தையா எமிலியானஸ்பிள்ளை |
| 170.யா/உ/5605 | திரு. சிவப்பிரகாசம் கந்தசாமி |
| 171.யா/உ/5622 | திருமதி. திலகவதி சண்முகநாதன் |
| 172.யா/உ/5677 | திருமதி. சிவமலர் சின்னையா |
| 173.யா/உ/5679 | திரு. கார்த்திகேசு தம்பிராசா |
| 174.யா/உ/5699 | திருமதி. பராசத்தி கனகசபை |
| 175.யா/உ/5729 | திருமதி. அருளம்மா சூசைப்பிள்ளை |
| 176.யா/உ/5752 | திரு. அம்பலவி இராமலிங்கம் |
| 177.யா/உ/5771 | செல்வி. செபமணி பீற்றர் |
| 178.யா/உ/5791 | செல்வி. சேளிசாந்தினி ஹேஸ்டிங்ஸ் |
| 179.யா/உ/5796 | திருமதி. புவனேசராணி சின்னப்பு |
| 180.யா/உ/5810 | திரு. ஆறுமுகம் சின்னத்தம்பி |
| 181.யா/உ/5820 | திரு. வைத்திலிங்கம் கதிர்காமநாதன் |
| 182.யா/உ/5844 | திரு. சிதம்பரப்பிள்ளை முருகேசு |
| 183.யா/உ/5849 | திரு. முருகர் துரையப்பா |
| 184.யா/உ/5887 | திருமதி. டொறதி தங்கரத்தினம் நவரட்ணம் |
| 185.யா/உ/5913 | திரு. சின்னப்பா செல்லையா |
| 186.யா/உ/5933 | திருமதி. இராசம்மா பொன்னம்பலம் |
| 187.யா/உ/5945 | திருமதி. சதாரூபி பாலசிங்கம் |
| 188.யா/உ/5999 | திருமதி. லூமினா யேசுதாசன் |
| 189.யா/உ/6000 | திருமதி. பிலோமினா ஜெனமியாஸ் |
| 190.யா/உ/6011 | திருமதி. விக்கினேஸ்வரி லோகநாதன் |
| 191.யா/உ/6012 | திரு. சிவப்பிரகாசம் ஜெயக்குமார் |
| 192.யா/உ/6119 | திரு. செல்லத்துரை அருளம்பலம் |
| 193.யா/உ/6122 | திரு. பெரியண்ணன் தெய்வேந்திரன் |
| 194.யா/உ/6187 | திருமதி. தனலட்சுமி குலசிங்கம் |
| 195.யா/உ/6293 | திருமதி. தவமணி செல்லத்துரை |
| 196.யா/உ/6298 | திருமதி. அலிஸ் தவமணி செல்வநாயகம் ஜோன் சமரன் |
| 197.யா/உ/6312 | திரு. நிற்சிங்கம் லோகநாதன் |
| 198.யா/உ/6323 | திருமதி. மல்லிகாதேவி செல்லவேல் |

(தொடரும்)

# மினி உலகக் கிண்ணப் போட்டி நேற்று லண்டனில் ஆரம்பம்




## முதலாவது ஆட்டத்தில் நியூஸிலாந்து வெற்றி

(லண்டன்)

ஐ.சி.சி. சம்பியன் கிண்ணப் போட்டிகள் நேற்று லண்டனில் ஆரம்பமாகின.

இப் போட்டித் தொடரில் ஓவல் மைதானத்தில் நடைபெற்ற நியூஸிலாந்து - அமெரிக்க அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் நியூஸிலாந்து அணி 210 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றுள்ளது.



இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 50 ஓவர்கள் முடிவில் 4 விக்கெற்றினை இழந்து 347 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் நாதன் அஸ்ரில் ஆட்டமிழக்காமல் 145 ஓட்டங்களைப் பெற்றார். இவர் 151 பந்துகளை எதிர்கொண்டு 13 பவுண்டரிகள், 6 சிக்ஸர்கள் அடங்கலாகவே 145 ஓட்டங்களைப் பெற்றார். அத்துடன் ரைரிஸ் 75 ஓட்டங்களையும், மக்மிலன் ஆட்டமிழக்காமல் 64 ஓட்டங்களையும் பெற்றனர்.



பந்து வீச்சில் அமெரிக்க அணி சார்பில் ஸ்ரபின் 2 விக்கெற்றினையும், றெய்ட், றொமேறோ ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெற்றினையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அமெரிக்க அணி 42.4 ஓவர்களில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 137 ஓட்டங்களை மட்டும் பெற்று தோல்வியடைந்தது.

இவ் அணி சார்பில் துடுப்பாட்டத்தில் லம்பேட் 39 ஓட்டத்தினையும், அலெக்சாண்டர் 26 ஓட்டத்தினையும் ஜோன்சன் 20 ஓட்டத்தினையும் அதிகபட்சமாக பெற்றனர். இதில் 3 பேர் ஓட்டம் எதனையும் பெறாமல் ஆட்டம் இழந்தமை குறிப்பிடத்தக்கது.

பந்து வீச்சில் நியூஸிலாந்து அணி சார்பில் ஜேக்கப் ஓரம் சிறப்பாகப் பந்துவீசி 36 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டினை வீழ்த்தினர். அத்துடன் டானியல் விக்டோரி 14 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டினை வீழ்த்தினர்.

(ச-121)

### இன்றைய மோதல்

அணிகள்: இந்தியா - கென்யா

மைதானம்: ரோஸ்போல்



அமெரிக்காவில் நடைபெறும் உலகக் கிண்ண ஹொக்கிப் போட்டிக்கான காலிறுதிப் போட்டியில் ரஷ்ய வீரர் இப்யா ஹோவல் ஸூல், எதிரணி வீரரான ஷெரீஸ் ஷெலி லோசை கோல் அடிக்க விடாது தடுத்து நிறுத்துகிறார்.

## 4 ஆண்டுகள் இடைவெளியின் பின்

# இந்திய-பாகிஸ்தான் அணிகள் மோதும் எட்டு நாள் ஹொக்கி டெஸ்ட் போட்டி

பாகிஸ்தானுக்கு எதிரான ஹொக்கி டெஸ்ட் போட்டிக்கான இநதிய அணியில் எதென்ஸ் ஒலிம்பிக்கில் பங்குபற்றிய அணியில் இடம் பெற்றிருந்த 6 பேர் இடம்பெறவில்லை.

4 வருட இடைவெளிக்குப் பின் இந்திய பாகிஸ்தான் ஹொக்கி அணிகளுக்கிடையிலான 8 போட்டிகள் கொண்ட தொடர் எதிர்வரும் 25ஆம். திகதி ஆரம்பமாகிறது.

இதற்கான 24 வீரர்கள் கொண்ட அணியை இந்திய ஹொக்கி சம்மேளனத் தலைவர் கே.பி.எஸ்.கில் சண்டீகரில் அறிவித்துள்ளார். போட்டியில் விளையாடும் அணி பின்னர் அறிவிககப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதைத்தவிர அவுஸ்திரேலியாவுக்கு அடுத்த மாதம் சுற்றுப பயணம் மேற்கொள்ளும் இந்திய ஜூனியர் அணிக்கான 24 வீரர்களின் பட்டியலும் வெளியிடப்பட்டிருக்கிறது.

எதென்ஸ் ஒலிம்பிக்கில் விளையாடிய தற்போது பாகிஸ்தான் தொடருக்கான அணியில் தன்ராஜ்பிள்ளை, பல்ஜீத் சிங் தில்லான், ககன் அஜீத் சிங், வில்லியம் ஜால்கோ, பிரப்ஜோதி சிங், தீபன் தாகூர் ஆகியோர் இடம் பெறவில்லை.

இவர்களில் தன்ராஜ் பிள்ளை மற்றும் தில்லான் இப் போட்டிக்கு தங்களை பரிசீலிக்க வேண்டாம் என்று கடிதம் கொடுத்திருந்தனர். மற்றவர்கள் முழு உடல்தகுதி இல்லாத காரணத்தால் பரிசீலிக்கப்படவில்லை என்றும் கில் தெரிவித்தார்.

ஒலிம்பிக்கில் நடைபெற்ற ஆட்டங்களில் எதிர் அணிகளுக்கு கடைசி நேரத்தில் கோலடிக்க வாய்ப்பு அளித்த தவறை இந்திய அணி இனிமேல் செய்யாது எனவும் கில் தெரிவித்தார். இந்திய பாகிஸ்தான் அணிகளுக்கிடையேயான எட்டுப் போட்டித் தொடரில் முதல் நான்கு ஆட்டங்கள் பாகிஸ்தானிலும், அடுத்த நான்கு ஆட்டங்கள் இந்தியாவிலும் நடை பெறுகின்றன.


பாகிஸ்தானில் கராச்சி (செப்.25) குயட்டா (செப்.27) பெஷவர் (செப்.29) லாகூர் (அக்.1) ஆகிய இடங்களிலும் இந்தியாவில் புதுடில்லி (அக்.4) சண்டீகர் (அக்.6) அமிர்த சரஸ் (அக்.8) ஹைதராபாத் (அக்.10) போட்டிகள் நடைபெறவுள்ளன.

பாகிஸ்தான் தொடருக்கான இந்திய அணி ஆட்ரியன் டிசௌசா, தேவேஷ் சௌகான் பாரத் சௌத்ரி (கோல் கீப்பர்கள்) திலிப் திர்க்கே, சந்தீப் சிங், ஹர்பால் சிங், ராகுநாத், சாமுவேல் நாக் (ஃபுல் பேக்ஸ்), வீரேன் ராஸ்குயினா, விக்ரம் பிள்ளை, இக்னேஷ் திர்க்கே, வி.எஸ்.வினய், கிரிஷ் பிம்பேல், பிபோத் திர்க்கே விவேக் குப்தா (ஹாப்பேக்ஸ்), ஆடம் சின்கிளார், அர்ஜூன் ஹாலப்பா, சந்தீப் மைக்கேஸ், துஷார் கந்தேகர், இந்தர்ஜித் சந்தா, ஹரி பிரசாத், பிரேந்தர் லாக்ரா (ஃபார்வார்டுகள்). (ப-07)

## அரையிறுதிப் போட்டிக்கு டேவர் போர்ட் தகுதி

யு.எஸ், ஓபன் டென்னிஸ் அரை யிறுதிப் போட்டிக்கு அமெரிக்காவின டேவன்போர்ட் தகுதி பெற்றுள்ளார். ஆண்கள் பிரிவு ஆட்டங்கள் மழை காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டன.

நியூயார்க்கில் நடைபெற்ற கிரார்ண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற யு.எஸ், ஓபன் டெ்ன்னிஸ் போட்டிகளில பெண்கள் ஒற்றையர் காலிறுதியில் டேவன்போாட் ஜப்பானின் ஷினோபு அசகோவை எதிர்த்து விளையாடினார். மழை காரணமாக இப்போட்டி மிகவும் தாமதமாகவே தொடங்கியது. அற்புதமாக விளையாடிய டேவன் போர்ட் 5 ஏஸ்களை வீசி அசத்தினார். இவரது அசுரவேக ஆட்டத்தைக் கண்டு ஷினோபு செய்வதறியாது திகைத்துப் போனார். இறுதியில் டேவன்போர்ட் 6-1, 6-1 என்ற நேர் செட்களில் வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார். இந்த வெற்றியைப்பெற இவருக்கு வெறும 47 நிமிடங்கள் தேவைப்பட்டது. (ப-7)




அமெரிக்காவில் நடைபெறும் எம்.எல்.பி.எனும் எல்லே போட்டிகளில் ஒக்லன்ட் தடகள வீரர் அணியைச் சேர்ந்த ரிம் ஹேட்கள், பொஸ்ரன் நீகாசக்ஸ் அணி வீரருக்கு பந்தை வீசி ஆட்டமிழக்கச் செய்ய முயற்சிக்கிறார்.



2006 உலகக் கிண்ண கால்பந்துப் போட்டிக்கான தகுதிகாண் போட்டியில் ஸ்கொட்லாந்திற்கும் செலொ வெளியாவுக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் ஸ்கொட்லாந்து வீரரொருவர் பந்தை சிரமப்பட்டு அடிக்கும் காட்சி. இப்போட்டி 0:0என்ற அடிப்படையில் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

## விளையாட்டு செய்திகள்

### யாழ்.வீரர் பதக்கம் வென்றார்



(சுண்டுக்குளி)

பதுளையில் நடைபெற்று வரும் 30 வது தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டியில், சாவகச்சேரியைச் சேர்ந்த குண்டெறிதல் வீரன் பிரதீப்குமார் யாழ். மாவட்ட அணிகள் சார்பாகப் போட்டியிட்டு 12.96 மீற்றர் தூரம், குண்டை வீசி வெண்கலப பதக்கத்தை வெனறெடுத்துள்ளார்.

இவர் அண்மையில் வவுனியாவில நடைபெற்ற, வடக்கு - கிழக்கு மாகாணமட்ட மெய்வல்லுநர் போட்டியில் 13.47 மீற்றர் தூரம் வீசி தங்கப பதக்கத்தை பெற்றதுடன். ஓர் புதிய சாதனையையும் படைத்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. ஆனால் இவர் வவுனியாவில் வீசிய அளவு தூரத்தை பதுளையில் வீசியிருந்தால் வெள்ளிப் பதக்கத்தை நிச்சயமாகப் பெற்றிருப்பார் என்றும் எனினும் துரதிஷ்டவசமாக தேக நிலை சரியில்லாததினால், அவர் தனது முழுத்திறமையைக் காட்ட இயலாது போய்விட்டதாகவம் கூறப்படுகிறது. (ப-110)

# கிரிக்கெற் ஒளிபரப்பு உரிமை ஏலத்தில் ஈ.எஸ்.பி.என், ஜி டிவி இடையே போட்டி

கிரிக்கெற் ஒளிபரப்பு உரிமை தொடர்பாக புதிதாக ஏலம் கோருமாறு ஜி டிவி மற்றும் ஈ.எஸ்.பி.என், ஸ்டார் ஸ்போர்ட்ஸ் நிறுவனங்களுக்கு மும்பை உயர் நீதிமன்றம் யோசனை தெரிவித்துள்ளது.

அதிக ஏலம் கோருபவருக்கு ஒளிபரப்பு உரிமையை வழங்கலாம் எனவும் தலைமை நீதிபதி டி.எஸ். பண்டாரி, நீதிபதி டி.வை சந்திரா சூட் அடங்கிய குழு உத்தரவிட்டுள்ளது. இவ் உத்தரவையடுத்து இவ் விவகாரத்தில் புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது.

இந்தியாவில் 2004ஆம் ஆண்டு அக்டோபர் முதல் 2008ஆம் ஆணடு செப்டம்பர் வரை நடைபெறும் தேசிய சர்வதேச கிரிக்கெற் ஆட்டங்களை ஒளிபரப்பு செய்யும் உரிமையை அதிகத் தொகைக்கு ஏலம் கேட்ட ஜி டிவிக்கு இந்திய கிரிக்கெற் சபை ஒளபரப்பு உரிமையை வழங்கியுள்ளது. ஜி டிவி ரூ.1416.8 கோடிக்கு ஏலம் கேட்டிருந்தது. ரூபா. 1058 கோடிக்கு ஏலம் கேட்டிருந்தது ஈ.எஸ்.பி.என். கிரிக்கெற் சபையின் முடிவை எதிர்த்து மும்பை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது. ஈ.எஸ்.பி.என். கேள்விப்பத்திர விதிமுறைகளை மீறி ஜீ டிவிக்கு ஒளிபரப்பு உரிமை வழங்கப்பட்டுள்ளதாக ஈ.எஸ்.பி.என் குற்றம் சாட்டியது.

இதையடுத்து ஒளிபரபபு உரிமை தொடர்பான ஆவணங்களைத் தாக்கல் செய்யுமாறு கிரிக்கெற்சபைக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது. இந்நிலையில் இருதரப்பு வாதங்களையும் கேட்டறிந்த நீதிபதிகள் புதிதாக ஏலத் தொகையை ஜீ. டிவி கோரலாம் என ஆலோசனை வழங்கினர்.

புதிதாக ஏலம் கோர இருதரப்பும் விருப்பம் தெரிவித்திருந்ததையடுத்து ஏலம் கோர இருதரப்புமே தகுதியானவை என கிரிக்கெற் சபை தெரிவித்திருக்கின்றது.

புதிதாக ஏலம் கோரும் யோசனையை கிரிக்கெற் சபையும் ஈ.எஸ்.பி.என்னும் ஏற்றுக்கொண்டுள்ளன.

இதுகுறித்து ஜி. டிவிகால அவகாசம் கோரியதைத் தொடர்ந்து அதற்கான முடிவைத் தெரிவிக்க செப்.15 ஆம் திகதிவரை கால அவ காசம் வழங்குவதாக நீதிபதிகள் அறிவித்துள்ளனர். (ப-7)

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்
தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும். - குறள்

# வலம்புரி

## பெற்றோரின் கண்காணிப்பு குறைந்துவிட்டது

எங்கு பார்த்தாலும் யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் சமூக கலாசாரச் சீரழிவுகள் பற்றியே பேசப்படுகின்றன. இறுக்கமான பண்பாட்டுக் கோலங்களை கொண்டிருந்த யாழ்ப்பாண சமூகம் இந்தளவு தூரம் தமது பண்பாட்டுக் கோலங்களை தொலைத்துவிடும் என எவருமே எதிர்பார்த்திருக்கவில்லை.

அந்தளவுக்கு நிலைமை மிக மோசமாகப் போய்விட்டது. இளைஞர்கள் மதுபானம், புகைத்தல் எனப் போதைகளுக்கு அடிமைப்பட்டவர்களாகத் தமது வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்டனர். ஒத்த இயல்புடைய இளைஞர்களின் கூட்டும் விடலைப் பருவத்து பாலியல் கோளாறுகளும் சேர்ந்து கொள்ள சினிமாப் படங்களில் வருகின்ற கற்பனைக் காட்சிகளை நிஜப்படுத்திக் கொண்டு காதல், கடத்தல், பலாத்காரம், வல்லுறவு, சண்டித்தனம் என்ற பட்டியலை நடைமுறைப்படுத்துவதில் இளைஞர் குழுக்கள் ஈடுபடத் தொடங்கிவிட்டன.

இதனால் அமைதியான - பண்பான குடும்பங்கள் ஏக்கத்துடனேயே உறக்கம் கொள்ளும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

சந்திகளில் கூடி நின்று சல்லாபம் போடும் இளவல்கள் வீதியால் போகும் பெண் பிள்ளைகளுடன் சேட்டை விடுகின்ற நிகழ்வுகளைப் பார்க்கின்ற போது சீ இப்படியுமா? யாழ்ப்பாணம் என்ற முடிவுக்கு வரவேண்டியதாக உள்ளது.

இது ஒருபுறம், மறுபுறத்தில் இளம் பெண்கள் சிலர் விடுகின்ற தவறுகளும் இளைஞர்களை தவறான பாதைக்கு இட்டுச் செல்கின்றது. குறிப்பாக பாடசாலை மாணவிகள் சிலர் நடந்துகொள்கின்ற முறைமைகள் இளைஞர்களைக் குறைகூறுவது சரியானதா? என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

இவ்வாறாக குறிப்பிட்ட எண்ணிக்கையான இளைஞர்கள் மீது குறை கூறுகின்ற அதேவேளை, குறித்த இளம் பெண்கள் சிலர் மீதான குறைகளையும் மூடி மறைத்துவிட முடியாது. இந் நிலையில் இறுக்கமான ஒழுக்க நெறிகளைக் கொண்ட யாழ்ப்பாணத்தில் இத்தகைய ஒழுக்கப் பிறழ்வுகள் எப்படி, ஏன் ஏற்பட்டது என்ற ஆய்வுகள் அவசியமானதாகக் காணப்படுகின்றது.

அவ் வகையில் நாட்டில் கடந்த 20 வருடங்களாக நிலவிய யுத்த சூழ்நிலை - அதன் விளைவான இடப்பெயர்வு வாழ்க்கை - அகதி முகாம்களில் வாழுகின்ற நிலைமை போன்ற சூழ்நிலைகள் இளைய சமுதாயத்தை வழி தவறிய பாதைக்கு வழி கோலுவதாக உள்ளது.

இதற்கு மேலும் ஊக்கம் கொடுப்பதாக தென் இந்திய சினிமாத் திரைப்படங்கள் அமைந்துள்ளன. தனித்து இலாப நோக்கில் தயாரிக்கப்படுகின்ற ஆபாசம் நிறைந்த தமிழ்ச் சினிமாப் படங்களின் தாக்கம் இளம் சமுதாயத்தை மிக மோசமாகப் பாதித்துள்ளது. கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்தில் நடந்தேறிய பெண்கடத்தல், காதல், விவாகரத்து, வல்லுறவு முயற்சி, சண்டை இவை யாவும் சினிமாப் படங்களில் வருகின்ற காட்சிகளை பிரதிநிதித்துவம் செய்வதாக அமைந்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு நல்லூர்க் கந்தனின் இரவு உற்சவத்தை நிறைவுசெய்து விட்டு இல்லம் திரும்பிக் கொண்டிருந்த தவில் நாதஸ்வரக் கலைஞர்களை, இளைஞர் குழு ஒன்று தாக்கிச் சென்றுள்ளது.

இவ் இளைஞர்கள் ஏன் இவ்வாறு நடந்து கொள்கின்றார்கள் என்ற கேள்வியை மக்கள் சமூகம் எழுப்பி அதற்கான விளக்கத்தை கண்டுகொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணத்தின் கலாசாரத்தைப் பொறுத்த வரையில் இங்கு ஒரே மொழி எல்லோருக்கும் வழக்கமான - தெரிந்த உறவுகள், வேற்று நாட்டு மக்களின் கலப்பற்ற இனத்துவம், பயணிக்கின்ற வீதிகளில் கூட தனித்து நின்று குசலம் விசாரிக்கின்ற பண்பு இப்படியாக இருக்கின்ற போது ஒரு இளைஞன் வன்மத்துடன் செயற்படுகின்றான் எனின் அவனுக்கு இருக்கக் கூடியதான பிரச்சினைகளை முதலில் இனங்கண்டு கொள்ளவேண்டும்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகள் மீதான கண்காணிப்பை என்று கைநழுவ விட்டார்களோ அன்றே பிள்ளைகள் தவறான பாதையில் பயணிக்க முற்படுகின்றனர். இந்த உண்மையை ஒவ்வொரு பெற்றோரும் உணர்வார்களே ஆனால் இளம் சமூகத்தின் நெறி பிறழ்வைத் தடுக்க முடியும்.

# சமாதானப் பேச்சுக்களின் தேக்கநிலை; சிறுவருக்கான உதவி வழங்குவதில் பெருந்தடை

## யுனிசெவ் அறிக்கையில் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பில் இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே நிலவும் தேக்கநிலை போரினால் பாதிக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான சிறுவர்களுக்கு உதவி வழங்குவதற்குப் பெருந்தடையாக இருப்பதாக ஐக்கியநாடுகள் சபையின் குழந்தைகள் நலன் காக்கும் அமைப்பான யுனிசெவ்வின் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் தடைப்பட்டுப் போயிருப்பது இளம்பராயத்தினை விடுதலைப்புலிகள் அமைப்பில் சேர்க்கப்படுவதை ஊக்குவிப்பதாக இருக்கிறதென தெரிவிககப்பட்டுள்ள யுனிசெவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

2004 ஆம் ஆண்டின் முதல் ஆறுமாத காலப்பகுதியில் மட்டும 500 இளம்பராயத்தினரை விடுதலைப்புலிகள் தமது படையில் சேர்த்துள்ளனர். 2002ஆம் ஆண்டு அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையே கைச்சாத்தான யுத்த நிறுத்த உடன்படிக்கை கடந்த 20ஆண்டு காலப் போருக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் அண்மையில ஏற்பட்டுள்ள பிளவினால்,வடக்கிலும் கிழக்கிலும் மீண்டும் மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற பகுதிகளில் சிறுவர்களை இயககத்தில் சேர்க்கும் பணிகள் மும்மராக நடைபெற்று வருவதாகவும் 500 சிறுவர்கள் பயிற்சி முகாம்களுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும இத்தகையவர்களில் சிலர் தாமாகவே விரும்பிச் சேர்ந்ததாகவும் ஏனையோர் பலாத்காரமாகவும்,சில சம்பவங்களில் வன்முறை வழிகளினால் சேர்க்கப்பட்டதாகவும் யுனிசெவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்ற வருடம் விடுதலைப்புலிகளினால் இடைத்தங்கல் முகாமகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டு பின்னர் அவர்கள் வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.இந்நிலையில் 1300ககும் அதிகமான சிறுவர்கள் இன்னமும் விடுதலைப்புலிகள் அமைப்பில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், 18வயதுக்குக் குறைந்த சிறுவர்கள் அனைவரையும் விடுவிக்கும்படி யுனிசெவ்,விடுதலைப்புலிகளை வற்புறுத்தியிருப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ம)

## யாழ்ப்பாணம் உள்ளிட்ட 6 இடங்களில் இந்து கலாசார மண்டபங்களை அமைக்க அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

இந்து கலாசார அமைச்சின் கலாசார மண்டபங்களை யாழ்ப்பாணம் உள்ளிட்ட ஆறு இடங்களில் நிர்மாணிப்பதற்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் சமர்ப்பிக்கப்பட்ட பத்திரத்திற்கு அமைச்சரவை நேற்றுமுன் தினம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணம், கொழும்பு, திருகோணமலை, பொத்துவில், வவுனியா மற்றும் மன்னார் ஆகிய ஆறு இடங்களில் இக் கலாசார மண்டபங்களை அமைப்பதற்கான அனுமதிகோரி பத்திரம் ஒன்றைக் கடந்த புதன்கிழமை அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சமர்ப்பித்திருந்தார்.

இந்நிலையில், பாராளுமன்றம் நேற்று முன்தினம் கூடியபோது அமைச்சர் டக்களஸ் தேவானந்தாவினால் சமர்ப்பிக்கப்பட்ட மேற்படி பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து மேற்படி ஆறு இடங்களிலும் இரண்டு மாடிக் கட்டடங்களை அமைக்க அமைச்சு தீர்மானித்துள்ளது. இக் கட்டடங்கள் ஒவ்வொன்றும் தலா 6 மில்லியன் ரூபா நிதி செலவில் தியான மண்டபம், கேட்போர்கூடம், பயிற்சிநிலையம், அரங்கம் ஆகியன உள்ளிட்ட நவீன வசதிகளுடன் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இதேவேளை, இவ்வாறானதொரு கலாசார மண்டபம் மட்டக்களப்பில் மாத்திரமே அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## பேச்சுக்கள் மீளவும் ஆரம்பிக்கப்படுவதை ஐ.நா.சபை தொடர்ந்தும் ஊக்குவிக்கும்

### இலங்கைக்கான ஐ.நா.பிரதிநிதி தெரிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா அரசாங்கமும், தமிழீழ விடுதலைப்புலிகளும் தாமதமின்றி மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டுமென ஐக்கிய நாடுகள் சபை தொடர்ந்தும் ஊக்குவிக்கும் என இலங்கைக்கான ஐக்கியநாடுகள் சபையின் அபிவிருத்தித் திட்டத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் தொிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்திய பின்னர், ஐக்கிய நாடு கள் சபையின் அபிவிருத்தித் திட்டத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் மிக்கேல் பேர்மியோ இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் மேலும் தாமதிப்பதால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளை தாம் உணர்ந்து கொண்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள அவா, இதனால் மக்கள் மத்தியில் சமாதான முயற்சிகள் மீது நம்பிக்கையிழந்து போகக் கூடிய அபாயம் தோன்றியுள்ளதையும் ஒப்புக்கொண்டார்.

இவரின் வேண்டுகோளுக்கிணங்க இலங்கையின் தற்போதைய நிலை குறித்து அவருக்கு விளக்கமளித்த தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்சசெல்வன்,

மோசமான போரினால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் இரண்டரை வருடப் போர் நிறுத்த உடன்படிக்கையாலும் எதுவித பயனும் அடைந்திராத நிலையில், அவர்களுக்கு வேண்டிய மனிதநேய உதவிகளை வழங்குவது சர்வதேச நாடுகளினதும், ஐக்கிய நாடுகள் சபையினதும் கடமை எனத் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் கடந்த தேர்தலில் வழங்கிய ஜனநாயக ரீதியிலான ஆணைக்கமைய, இடைக்கால நிர்வாக சபை யோசனைகளின் அடிப்படையில் பேச்சுவாத்தைகளை ஆரம்பிக்க முன்வருமாறு ஸ்ரீலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டியது சர்வதேச சமூகத்தின் கடமையாகும் எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ற)

## பயிற்சிக்குத் தெரிவாகாத பட்டதாரிகளுக்கு!

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்தினால் தற்போது அமுல் நடாத்தப்படுகின்ற பட்டதாரிகள் பயிற்சித் திட்டத்தின் கீழ், பிரதேச செயலகங்கள் மூலம் விண்ணப்பித்து இதுவரை பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படாத பட்டதாரிகள் இவ்வாறு தெரிவுசெய்யப்படாமை தொடர்பான குழு விபரங்களுடன் முகாமைத்துவப் பணிப்பாளர் நாயகத்திற்கு மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக தமது விண்ணப்பத்தை அனுப்பிவைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மேன்முறையீடு செய்பவர்கள், விண்ணப்பம் செய்த திகதிக்கு முன்பு இலங்கைப் பல்கலைக்கழகங்களில் அங்கீகரிக்கப்பட்ட பட்டங்களைப் பெற்று, பிரதேச செயலகங்களில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றி, பிரதேச செயலகத்தால் அனுப்பிவைக்கப்பட்ட பட்டியலில் பெயா குறிப்பிடப்பட்டவர்களாகவும், இதுவரை அரச, தனியார் துறைகளில் நிரந்தரமான வேலையற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் அறிவித்துள்ளார். (ற)

## அநுராதபுரம் எல்கட்டுவ பகுதியில் கால்வாய் ஒன்றிலிருந்து வெடிபொருட்கள் மீட்பு

அநுராதபுரம் எல்கட்டுவப் பகுதியில் உள்ள கால்வாய் ஒன்றில் இருந்து வெடிபொருட்கள், விமான எதிர்ப்பு சன்னங்கள், ஆர்.பி.ஜி குண்டுகள் ஆகியன மீட்கப்பட் டுள்ளன. குறித்த கால்வாயைச் சுத்தம் செய்த போது, குண்டுகளும் தோட்டாக்களும் கண்டுபிடிக்கப்பட்டதாக அநுராதபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இராணுவக் குண்டு செயல் இழக்கும் பிரிவினரால் வெடிபொருட்களும் குண்டுகளும் செயல் இழக்கப்பட்டதாகக் குறிப்பிட்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, விமான எதிர்ப்பு சன்னங்கள் இரசாயன பரிசோதனைக்காக அனுப்பப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். (ற)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

உங்களிடமே நம்பிக்கை வையுங்கள். ஒரு காலத்தில் நீங்கள் வேதகாலத்தைச் சேர்ந்த ரிஷிகளாக இருந்தீர்கள். இப்போது நீங்கள் வேறுவித வடிவம் தாங்கி வந்திருக்கிறீர்கள். நீங்கள் கடவுளின் குழந்தைகள். அழியாத பேரின்பத்தின் பங்குதாரர்கள். புனிதமும் பூரணத்துவமும் பெற்றவர்கள்.

சுவாமி விவேகானந்தர்

# பயிற்சிக்கு சமுகமளிக்காத பட்டதாரிகளுக்கு காலக்கெடு

(யாழ்ப்பாணம்)

வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வழங்கும் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் இருந்து முதற் கட்டமாக பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்ட 538 பட்டதாரிகளில் 476 பட்டதாரிகளே பயிற்சிகளுக்கு சமுகமளித்துள்ளனர்.

இப் பயிற்சி நெறிக்கு சமுகமளிக்காத ஏனைய 62 பட்டதாரிகளும் எதிர்வரும் 13ம் திகதி திங்கள் கிழமைக்கு தொடக்கம் பயிற்சிக்கு சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

அன்றைய தினமும் பயிற்சிக்கு சமுகமளிக்கத் தவறும் பட்சத்தில் அப் பயிற்சிகளிலிருந்து அவர்கள் இடைநிறுத்தப்படுவார்கள் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அவர்கள் இனி ஒருபோதும் பயிற்சியில் இணைத்துக் கொள்ளப்படமாட்டார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பயிற்சிக்கு சமுகமளித்த மாணவர்களில் ஒரு கிழமைக்கு மேலாக விடுமுறை எடுப்பவர்கள் மாவட்ட மருத்துவ அதிகாரியின் மருத்துவ அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் பெண்களுக்கு பிரசவ விடுமுறை மட்டுமே வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-19)

# உயர் தேசிய டிப்ளோமா பட்டதாரிகளுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

உயர் தேசிய கணக்கியல், உயர் தேசிய வர்த்தக, உயர் தேசிய முகாமைத்துவ பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு உயர் தொழில்நுட்ப நிறுவன பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பட்டியலில் பெயர் இடம்பெற்றவர்களும், இடம்பெறாதவர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஒன்றிய செயலாளர் வி. தயாபரன் கேட்டுள்ளார்.

இதேவேளை பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட உயர் தேசிய டிப்ளோமாப் பட்டதாரிகளின் பெயர்ப்பட்டியலில், பெயர்கள் இடம்பெறாத பட்டதாரிகளின் பிரதிநிதிகள் நிதி அமைச்சின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களப் பணிப்பாளரை 8ஆம் திகதி சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். (ச)

# கடற்கரும்புலி சுதர்சனாவின் வித்துடல் கோப்பாயில் விதைப்பு

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு கடற்பரப்பில் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது வீரச்சாவடைந்த கடற்கரும்புலி மேஜர் சுதர்சனா (துரைசிங்கம் சுதாநந்தினி யாழ்ப்பாணம்) வின் வித்துடல் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது.

நேற்று அவரது இல்லத்திலிருந்து எடுத்துவரப்பட்ட வித்துடல் பிற்பகல் ஒரு மணிக்கு நவாலி மகா வித்தியாலய மண்டபத்தில் வைக்கப்பட்டு வீர வணக்கக் கூட்டம் இடம்பெற்றது.

யாழ். மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவிழி தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் ஈகச் சுடரினை பெற்றோர் ஏற்றி வைத்தனர். தொடர்ந்து மலர் வணக்கம் இடம் பெற்றது.

வீர வணக்க உரையினை நவாலி மகா வித்தியாலய உப அதிபர், சர்வதேச மாணவர் பேரவையைச் சேர்ந்த கிருஷ்ணா, கடற்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பூரணி ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து பாண்ட் வாத்திய இசை அணிவகுப்பு மரியாதையுடன் வித்துடல் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பிற்பகல் 4 மணிக்கு விதைக்கப்பட்டது. (ச)

# சமாதானம் வேண்டி மஹாயாகம்

(கொழும்பு)

நாட்டில் அமைதி, சாந்தி, சமாதானம் நிலவி சகல இன மக்களும் சுபீட்சமுடன் வாழ இறை அருள் வேண்டி இன்று மாலை 6 மணிக்கு சபரிமலை ஸ்ரீ ஐயப்ப சுவாமிக்கு விசேட திரவ்ய ஹோம மஹாயாகம் நடைபெறவுள்ளது.

இப் பூசை கொச்சிக்கடை தம்பையா சத்திரம் ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானத்தில் 'சர்வ தேச இந்துமத குரு பீடாதிபதி' ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் தலைமையில் நடைபெறும்.

விசேட திரவ்ய அபிஷேகம், திரவ்ய ஹோமம், ஐயப்பன் பஜனை, பதினெட்டாம்படி விஷேட பூஜை என்பன நடைபெறவுள்ளன.

# யாழ். பல்கலைக்கழகத்தில் இன்று ஒற்றுமைக்கான மக்கள் அரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகத்தின் பண்பாட்டுக் குழுவின் அரங்கக் குழு நடத்தும் 'ஒற்றுமைக்கான மக்கள் அரங்கு' எனும் கருத்தாடல் நிகழ்வு இன்று சனிக் கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் யாழ். பல்கலைகழக நூலகக் கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

தமிழ் மக்களது ஒன்றிணைவை இலக்காகக் கொண்டே இக் கருத்தாடல் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதில் கலந்துகொண்டு தமது மன உணர்வுகளை வெளியிட்டு, தமிழ் மக்களது ஒற்றுமையை உலகறியச் செய்வதற்கு அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (21)

# கணனி மையம் திறப்பு

அவுஸ்திரேலியா தென்மராட்சி நிறுவனம் மற்றும் சாவகச்சேரி நகரசபை ஆகியவற்றின் அனுசரணையுடன் தென்மராட்சி மக்கள் நலச் சேவைகள் சங்கத்தினால் ஆரம்பிக்கப்படும் கணனி மையம் இன்று பிற்பகல் 4.00 மணிக்கு சாவகச்சேரி நகரில் திறந்துவைக்கப்படவுள்ளது. (ப-47)

## இருவேறு...

கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் ஒருவர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மந்திகையைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை இராஜதுரை (வயது 44) என்பவரே காயமடைந்தவராவார். (ச-150)

## விசேட தூதுவர்...

பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை சந்திக்கவுள்ளார். இச் சந்திப்பில் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ்பிரட்ஸ்கரும் கலந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை வரும் எரிக்சொல்ஹெய்ம் அரசியல் தலைவர்களை சந்திக்கவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-16-08)

## கடற்படை...

பார்வையிட்டு சடலத்தை அவர்களது உறவினரிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டதையடுத்து சடலம் நேற்று மாலையே கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இச் சம்பவத்துடன் தொடர்புடைய சிப்பாய் ஒருவர் காரைநகர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார். இச் சம்பவம் தொடர்பாக பொலிஸாரும் கடற்படையினரும் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச)

## விடுதலைப் புலிகளை சீண்டிவிடும்...

வளைத்து தாக்க முற்பட்டபோது அதனை அங்கிருந்த விடுதலைப் புலிகள் வெற்றிகரமாக முறியடித்துள்ளனர்.

இலங்கை இராணுவ முகாம் அமைத்துள்ள இடத்திலிருந்து வந்தே இத் தாக்குதலை மேற்கொண்டிருந்தனர். அப்பகுதியில் தங்கியிருந்து கண்ணிவெடி அகற்றும் மைக் நிறுவனப் பணியாளர்களின் தகவல்களின்படி இத் தாக்குதல் நடத்தியவர்கள் கண்ணிவெடி அகற்றும் மைக் நிறுவனத்திற்குள் நுழைந்து துப்பாக்கி மூலம் பணியாளர்களை மிரட்டி தாக்குதல் நடத்தியவர்களின் தரப்பில் கொல்லப்பட்ட இருவரின் சடலங்களையும் அவர்களின் வாகனங்கள் மூலம் இராணுவ முகாம் அமைந்திருந்த சுற்றாடல் பகுதிக்கு கொண்டு சென்றிருந்தனர். இவ் இரு சடலங்களும் அப்புறப்படுத்தப்பட்ட சம்பவம் எவருக்கும் தெரியப்படுத்தப்படக் கூடாதென்றும் எச்சரித்திருந்தனர்.

கொல்லப்பட்ட இரு சடலங்களையும் அப்புறப்படுத்த உதவிய மைக் நிறுவனப் பணியாளர் வசம் இருந்த வோக்கி டோக்கிகளும், கையடக்கத் தொலைபேசிகளும் தாக்குதல் நடத்தியோரால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளது. இதன்போது மைக் நிறுவனப் பணியாளர்களில் நால்வர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களில் மூவர் வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இது போன்ற தாக்குதல் சம்பவங்கள் இடம்பெறுவது இது தான் முதற் தடவையல்ல என்பது கண்காணிப்புக் குழுவுக்கு தெரியும். யுத்தநிறுத்த உடன்பாட்டை தக்கவைத்துக் கொண்டிருப்பதற்கும் இவை உதவக் கூடியவை அல்ல.

தமிழ் மக்களுக்கு கோபத்தை ஏற்படுத்தி அவர்களின் பொறுமையை சோதிக்கும் வகையில் இடம்பெறும் இத் தாக்குதல் சம்பவங்களினால் சமாதான முயற்சிகளில் பாதிப்பு ஏற்படும். எனவே இத்தகைய சம்பவங்கள் இடம்பெறாவண்ணம் அவற்றைத் தடுத்து நிறுத்தி ஆணித்தரமான நடவடிக்கைகளை எடுத்து சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கான நடவடிக்கைகளை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு மேற்கொள்ள வேண்டும் என்றும் சு.ப. தமிழ்ச்செல்வன் அக் கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார். (ம)

## நாட்டில் சமாதானம்...

சமாதான முயற்சிகளை இழுத்தடிக்கிறது என நாம் உணர்ந்து கொண்டோம். அதனால் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்க தீர்மானித்தோம். இந்த ஆதரவை வைத்து அரசாங்கம் சமாதான முயற்சிகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்றார்.

அத்துடன் நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு மக்களுக்கு உதவி வழங்கவுமே அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கியதாக அவர் மேலும் தெரிவித்தார். (121-08)

## கச்சதீவில்...

தங்க வைத்தார். இன்று அவர்கள் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டு யாழ். செயலகத்தில் வைத்து அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டபின் அவர்களது சொந்த ஊருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

கச்சதீவில் உணவுக்காகத் தவித்துக் கொண்டிருந்தபோது இந்திய மீனவர்கள் தமக்கு கஞ்சி வழங்கியதாக ஒருவர் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் இருந்து புறப்பட்டு இந்திய மீனவர்களால் கச்சதீவில் இறக்கப்பட்டு நிர்க்கதியான நிலையில் 28 அகதிகளும் பரிதவித்த சம்பவம் தெரிந்ததே. (ச-08)

## இலங்கைக்கான...

னைகள் எதனையும் தீர்க்கும் நோக்கத்தில் செயற்படவில்லை. தமிழர்களுடன் செய்து கொள்ளப்படும் ஒப்பந்தங்களை கிழித்தெறியும் நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். இந்தவொரு சூழ்நிலையில் தான் தமிழர்கள் சார்பில் விடுதலைப் புலிகள் ஆயுதம் ஏந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டதுடன் அதில் வெற்றியடைந்தார்கள். இதன் பிறகுதான் அரசாங்கம் சமாதானப் பேச்சுக்கு விடுதலைப் புலிகளை அழைத்தது.

இதன் அடிப்படையில் தான் விடுதலைப் புலிகள் இடைக்கால நிர்வாக வரைபை அரசாங்கத்திடம் சமர்ப்பித்தார்கள். இது ஒரு பிரிவினை அல்ல. மற்றும் ஒரு நாட்டைப் பிரிக்கும் செயலும் அல்ல. ஐக்கிய இலங்கைக்குள் தான் இந்த இடைக்கால வரைபு உள்ளது. அதனால்தான் இந்த வரைபின் அடிப்படையில் உடனடியாக பேச்சுவார்த்தை ஆரம்பிக்க வேண்டும் என கனேடியத் தூதுவரிடம் வலியுறுத்தியதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச-121)






இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.09.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.